Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 | திருவள்ளுவர் ஆண்டு: 2036 | புரட்டாதி- 05 | ஹிஜ்ரி 1428 | சஃபான் 16 | (21.09.2005) | புதன்கிழமை | இதழ்:356

Dialog டயலொக்

kit

எந்நேரமும் என்னுடன்....

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

# இறுதிப்போரை ஆரம்பிக்க அறைகூவல்

## கிளிநொச்சி பேராளர் மாநாட்டில் தீர்மானம்



கிளிநொச்சி —

தமிழருக்கான உரிமையை சிங்கள அரசு இனிமேலும் தருமென நம்பியிருந்து ஏமாறுவதை விடுத்து தமிழீழ மண்மீட்புக்கான இறுதிப் போராட்டத்தை ஆரம்பிப்பதே ஒரு வழி என்றும் இறுதிப்போருக்கு தற்காப்பு பயிற்சியைத் தமக்கு வழங்குமாறும் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் போருக்கான தேசிய அறைகூவல் நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

தமிழீழ விடுதலைப் போருக்கான தேசிய அறைகூவல் நிகழ்வு நேற்றுக்காலை 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் சு.பசுபதிப்பிள்ளை தலைமையில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம், போராளி ஒருவரின் தந்தை வேலாயுதபிள்ளை ஆகியோர் சுடர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக்கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவநாத் ஏற்றினார்.

தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் திருவுருவப் படத்துக்கான சுடரை தமிழீழ நிர்வாகசேவை துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் ஏற்ற மலர்மாலையை திருமதி காசிநாயகம் அணிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் அமிர்தலிங்கம்,

(12 ஆம் பக்கம்பார்க்க)

# துணைப்படைகளின் செயற்பாடுகளாலேயே வடக்கு - கிழக்கில் அமைதியற்ற சூழ்நிலை!

## காவலிலுள்ள பொலிஸாரை பெற்றோர் நேற்று சந்திப்பு!



கிளிநொச்சி —

தமிழீழ நீதிமன்ற விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று பொலிஸாரையும் அவர்களது பெற்றோர்கள் கிளிநொச்சியில் சந்தித்து உரையாடினர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. விளக்கமறியலில் உள்ள பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் பொவிற்றகொட (வயது 35) மற்றும்

(12 ஆம் பக்கம்பார்க்க)

## ஆயுதங்களைக் களையுமாறு அரசுக்கு இணைத்தலைமை நாடுகள் வற்புறுத்து

வொஷிங்டன் —

துணைப்படைகளின் செயற்பாடுகளாலேயே வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அமைதியற்ற நிலை தோன்றியுள்ளது. எனவே, இலங்கை அரசு துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்றும்-

இலங்கைப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வே காணப்படவேண்டுமென்றும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அரசாங்கத்திடம் வற்புறுத்திக் கேட்டுள்ளன.

நேற்று முன்தினம் நியூயோர்க்கில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் பெனிற்றா பெர்ரேரோ, ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி, தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வலிமைமிக்க மூன்றாவது சக்தியாக

## தமிழீழ விடுதலைப் போருக்கான

# வலிமைமிக்க மூன்றாவது சக்தியாக கடற்புலிகள் உருவெடுத்துள்ளனர்!

## பேராசிரியர் சூரிய நாராயணன் எச்சரிக்கை

புதுடெல்கி —

இந்துமா சமுத்திரப் பிராந்தியத்தில் மூன்றாவது வலிமையான கடற்படையாக கடற்புலிகள் உருவெடுத்திருப்பதாக, இந்தியப் பேராசிரியர் சூரியநாராயணன் அச்சம் தெரிவித்துள்ளார்.

பாக்குநீரிணைப் பிராந்தியத்தில் மீனவர்கள் பிரச்சினை என்ற தலைப்பில் பேராசிரியர் சூரியநாராயணன் எழுதிய புத்தகத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

இந்திய - இலங்கை இடையே கடல்சார் கொள்கை நெகிழ்வுத் தன்மையாக இருக்கிறது. இந்தப் பிராந்தியத்தில் வலிமை மிக்க மூன்றாவது சக்தியாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் உருவெடுத்து வருகிறார்கள்.

தொடக்க நிலையிலேயே இந்தியா கடற்புலிகளை அழித்துவிட வேண்டும்.

இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கும் இந்தியத் தமிழ் மீனவர்களுக்கும் இடையேயான பிரச்சினையில் இலங்கைக் கடற்படை இந்தியத் தமிழ் மீனவர்களுக்கு ஆதரவான நிலையில் இருப்பதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள் பக்கமே சாய்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

இலங்கை - இந்தியத் தமிழ் மீனவர்கள் கைது செய்யப்படுகின்றபோது, அது தொடர்பாக தங்களுடன் இந்தியா நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும் (12 ஆம் பக்கம்பார்க்க)

# தமிழீழ விடுதலைப் போருக்கான தேசிய அறைகூவல் பிரகடனம்!

கிளிநொச்சி —

எம்மீது வலிந்து திணிக்கப்படும் போரை எதிர்கொள்வதற்கு அனைவரும் தயாராவோம். முழுமையான ஆயுதப் பயிற்சியைப் பெற்று தாயக விடுதலைக்கு எம்மையும் எம்மைச் சூழவுள்ள அனைத்தையும் அர்ப்பணிப்போம் என, நேற்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் போருக்கான தேசிய அறைகூவல் பிரகடனம் வெளியிடப்பட்டது.

இந்த அறைகூவல் பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் போர் ஓய்வும், பேச்சுவார்த்தைகளும் பல தடவைகள் நடைபெற்றபோதும் அவற்றில் வெற்றியடைய முடியவில்லை. எனினும், சர்வதேச சமூகத்தின்பால் நாம் வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையில் கடந்த மூன்று வருட போர் ஓய்வும், சமாதான முன்னெடுப்புக்களும் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வந்தும் உருப்படியான எந்த முடிவுகளும் எட்டப்படமுடியவில்லை. தற்போது யுத்தநிறுத்தம் கேள்விக்குள்ளாகியுள்ளது.

போராளிகள், தமிழினப் பற்றாளர்கள், பொதுமக்கள் மீதான கொலைகளும், கொலை முயற்சிகளும், அச்சுறுத்தல்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன. அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணி புரிந்த போராளிகளின் நடவடிக்கைகள் அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ளது.

இவர்கள் உயிர் பாதுகாப்பு கருதி மீள அழைக்கப்பட்டுள்ளனர். போர்நிறுத்தத்தையும், போர்நிறுத்த உடன்பாட்டு விதிகளையும், ஏற்பாடுகளையும் காப்பாற்றக்கூடிய நீடித்துப் பேணக்கூடிய உபாயங்கள் எதுவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்குப் பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு —

கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி ரூபி வலண்டினாவின் வீட்டின் மீது கடந்தவாரம் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்து, கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்றுக்காலை 11 மணி தொடக்கம் 1.30 மணிவரை நடத்தப் பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 1000 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டனர். ரயர் களை வீதியின் குறுக்கே போட்டு எரித்த மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தால், மட்டக்களப்பு - (12 ஆம் பக்கம்பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
EXPOAIR
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
Your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# தமிழருக்கு இழைக்கப்படும் அநீதியை வெளிப்படுத்த பொங்கு தமிழில் உணர்வெழுச்சியுடன் அணிதிரள்வோம்

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம் —

சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களுக்கு இழைத்துவரும் அநீதிகளால் தமிழ் மக்களாகிய நாம் இறுதித் தீர்மானம் எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்பதை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்துவதற்காக யாழ்.பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் அனைத்து தமிழ் மக்களும் உரிமைக் குரல் கொடுப்பதற்கு அணிதிரளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் அனைத்து தமிழ் மக்களையும் பங்கேற்குமாறு அவர் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி அவர்களின் அடிப்படை உரிமைகளை ஏறிமிதித்து தாயகத்தை சிதைக்கவும் அவர்களுக்குரிய தன்னாட்சி உரிமையை நிராகரிக்கவும் சிங்கள, பௌத்த பேரினவாதம் தனது பேய்க் கூச்சலை தென்னிலங்கையில் மீண்டும் உரக்க ஒலிப்பது எமக்கு நன்றாகவே கேட்கின்றது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலைக்கு தென்னிலங்கை அரசியல் சூழ்நிலை சென்றுள்ளது. இந்த சிங்கள, பௌத்த பேரினவாதம் அவ்வப்போது எழும்பி ஆடிய ஆட்டங்களால் தமிழர் தாயகத்திலும், தமிழர் தம் நெஞ்சங்களிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் பல மாறாத காயங்கள் ஏற்பட்டன. ஆனால், தற்போது எழுந்து ஆர்ப்பரிக்கும் சிங்கள, பௌத்த பேரினவாதம் தமிழர் தாயகத்தைக் கூறு போட்டு தமிழர்களின் இதயத்தையே பிளந்துவிட்டும் மூர்க்க நிலையை இறுதி வடிவமாக எடுத்துள்ளது.

இதன் மூலம் ஜனநாயக பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட வழிமுறைகளினூடாக தீர்வு ஒன்றை எட்டுவதற்கிருந்த சந்து, பொந்துகளைக் கூட அடைத்துவிட்டு பேரினவாதம் எக்காளமிடுவதை தமிழ் மக்களாகிய நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தற்போது தோன்றியுள்ள பயங்கரவாத நிலையால் எழும் எமது உணர்வலைகளை தமிழ் பேசும் மக்களாகிய நாம் சர்வதேச சமூகத்தின் முன் கொட்டி நியாயத்தைக் கேட்கவேண்டும். சிங்கள பேரினவாதத்தின் மூர்க்கத்தனத்தினால் இறுதி முடிவு எடுக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை சர்வதேச சமூகத்தின் முன் எடுத்தியம்ப வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனினதும் கட்டாய கடமையாகும்.

எமது தாயகத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்வதற்கு எமக்கு இயற்கையாகவே இருக்கும் உரிமையை உலகம் அங்கீகரிக்க வேண்டும். எமது தாயகப்பகுதியில் ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தினர் வெளியேற வேண்டும்.

வரலாற்று ரீதியாக எமது தாயகம் கொண்டிருந்த இறையாண்மையை மீண்டும் பெறுவதற்கும், எமது சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்தவும் உலகத்தைக் கோருவதற்கான எழுச்சி எமது தாயகப் பிரதேசமெங்கும் பொங்கி எழுந்ததை மனதில் கொண்டு யாழ். மாவட்டத்தில் இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் அனைத்துத் தமிழ் மக்களும் கலந்துகொள்ள வேண்டும் என கூவி அழைக்கின்றேன்.

தீர்க்கமான இறுதிக்கட்ட நிலையொன்றை எடுப்பதற்கு சிங்களப் பேரினவாதம் எம்மை நிர்ப்பந்தித்துள்ளது. அவர்களுடன் நாங்கள் செய்த ஒப்பந்தங்களோ பல, கிழிந்த கடதாசித் துண்டுகளாகிவிட்டன. இறுதியாக இயற்கைப் பேரவலத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்புக் கூட செல்லாக்காசாகிவிட்டது. இந்த அவலத்தையும், பேரினவாதம் செய்த அநியாயங்களையும் கவனத்தில் கொண்டு இறுதியான நிலையொன்றுக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை எடுத்துக்காட்டி எழுச்சிப் பிரகடனம் செய்ய அலை அலையாக திரண்டுவாருங்கள் என பணிவன்போடு அழைக்கின்றேன். இது எமது தேசியக் கடமை என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான புதய பிரிவுகள் ஆரம்பம்!!!
80% Off
INTERNET & E-MAIL 1,000/=
OFFICE AUTOMATION
DESKTOP PUBLISHING
PHOTO MIXING
PROGRAMMING
HARDWARE 1,500/=
HIGHER DIPLOMA IN AUTOCAD 3,000/=
(New South Wales University Syllabus & Hadouts)
MULTIMEDIA 3,500/=
ஆரம்பம் : 17, 18, 24, 25 - 09.2005
மானிப்பாய் வீதி, மருதனார்மடம்
021 - 4590222 etouch@wow.lk
[C/4634]


## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

சுப்பிரமணியம் சுவாசினி என்பவருடைய 736332604V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், பணப்பையும் முகமாலைவன்னி செல் வோருக்கான பதிவிடத்திற்கு அருகில் 19.09.05 நேற்று முன்தினம் காலை 11.15 மணியளவில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0776351801 என்ற தொலை பேசி இலக்கத்துடனோ, கிளிநொச்சி பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையுடனோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

(814)


ஓம் கிரியா பாபாஜி நம ஓம்
ஆன்மீக கிரியா யோகா சங்கம்
(கனடா நிலையத்தின் யாழ்.கிளை)

யோகாசன பயிற்சி வகுப்பும் யோகா சிகிச்சை முறையும்
அங்குரார்ப்பண வைபவம்

காலம் : 21.09.2005 புதன்கிழமை பிற்பகல் 4.00 மணி
இடம் : 'வேளாவை' அளவெட்டி வடக்கு,
(ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம் அருகாமை)
அளவெட்டி.
தலைவர்: செஞ் சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள்
(உப.அதிபர் ஸ்கந்தவரோதயா கல்லூரி)
இயக்குநர்: திரு.அப்பர்சுவாமி இராமநாதன் அவர்கள்.
ஆர்வமுள்ள அனைவரும் பங்கு பற்றி பயனடையுமாறு அழைக்கப்படுகின்றனர்.
இயக்குநர்
(2065)



யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
கணக்குப் பதியுனர் தேவை
கல்வித் தகைமை :- கணக்கியல் துறையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
அனுபவம் :- ஆகக் குறைந்தது 03 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
வயது :- இன்றைய திகதியில் 35 வயத்துக்கு குறையாமலும் 65 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஆண்கள் மட்டும்)
சம்பளம் :- பேசித் தீர்மானிக்கப்படும்.
இத்தகைமைகளுடன் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்கள் இருவரின் சிப்பாரிசுக் கடிதத்துடன், 23.09.2005 வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு எமது சங்க காரியாலயத்திற்கு சமுகந் தரவும்.
யா.மா.பே.உ.சங்கம்
செயலாளர்.
கா.பாஸ்கரன்



நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் மற்றும் பலர் நடித்த
கிச்சா வயது 16
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் ஜெய்ஆகாஷ், பிரணவி, நாசர், தாமு, வையாபுரி மற்றும் பலர்நடித்த
குருதேவா
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
ரவிகிருஷ்ணா, கோபிகா, பிரகாஷ்ராஜ், ரேவதி மற்றும் பலர் நடித்த
பொன்னியின் செல்வன்
காட்சிகள்:- 11.00, 3.00, 7.00, 10.00 (பழைய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
2ஆவது ஜனத்திரள் வாரம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு -
நியூ புகழ் - எஸ்.ஜே.சூர்யா, நிலா

அன்பே ஆருயிரே
இசை - A.R. ரகுமான்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30


## சிறுவனின் அறுவைச் சிகிச்சைக்கு உதவுமாறு கோரிக்கை விடுப்பு



நாவற்குழி - தச்சன்தோப்பைச் சேர்ந்த விமலநாதன் ஜசிந்தன் என்ற எட்டு வயது சிறுவனின் அறுவைச் சிகிச்சைக்கு அன்புள்ளம் கொண்ட கொடையாளர்களை உதவுமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்த நடவடிக்கையின்போது தந்தையை இழந்து வறுமை நிலையில் இருக்கும் இந்தச் சிறுவனின் உடல்நிலை ஆபத்தான நிலையை அடைந்துள்ளதால் கொழும்பு அப்பலோ வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பெறவேண்டியுள்ளது.

சிறுநீரக அறுவைச் சிகிச்சைக்காக இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா தேவையாக இருக்கின்ற போதிலும் இவர்கள் வறுமைநிலையில் இருப்பதால் அறுவைச் சிகிச்சை செய்து மகனின் உயிரைக் காப்பாற்ற அன்புள்ளம் கொண்ட கொடையாளர்களை நிதியுதவி செய்யுமாறு சிறுவனின் தாயார் விமலநாதன் பூபதி கோரியுள்ளார்.

சிறுவனின் உயிர்காக்க உதவி செய்பவர்கள் மக்கள் வங்கியின் கன்னாதிட்டி கிளையில் வி.பூபதி 284 - 207 - 108290 - 2 என்ற கணக்கு இலக்கத்துக்கு அனுப்பி உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நாவற்குழி பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவர்கழக உறுப்பினர்கள் இந்தத் தொகையை அன்புள்ளம் கொண்ட கொடையாளிகளிடம் சேகரிக்க ஏற்பாடு செய்து வருகின்றனர்.

## எழுச்சி நிகழ்வுக்கு உதவியோருக்கு!

வட்டக்கச்சி —

கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வை சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைத்தவர்களை கிளிநொச்சி மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர், இணைப்பாளர், செயலணிக்குழுவினர் இன்று பிற்பகல் 3 மணிக்கு மாவீரர் மண்டபத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இந்த நிகழ்வில் வட்டக்கச்சி அரசியல்துறை நிர்வாக செயலணிக் குழுவின் தேசிய எழுச்சிப் பேரவை, மாதர் சங்கங்கள், முன்பள்ளிகள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களை கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(9)

## இளைஞர்களை காணவில்லை

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற இரு இளைஞர்களை காணவில்லை என உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மானிப்பாயைச் சேர்ந்த யோகநாதன் சசீதரன் (வயது 25), கதிரமலை துஷ்யந்தன் (வயது 24) ஆகிய இருவருமே காணாமற் போனவர்களாவர்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற இவர்கள் இருவரும் இதுவரை வீடு திரும்பவில்லை என உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சுற்றாடல் பாதுகாப்புதின நிகழ்வுகள்

சுற்றாடல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு சுற்றாடல் பாதுகாப்பு சபை வலி. தெற்கு பிரதேச சபையுடன் இணைந்து பல சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சிகளை நாளை மறுதினம் நடத்தவுள்ளது.

சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டும் விளம்பரப் பலகைகள் நாட்டுதல், சுன்னாகம் சந்தை மற்றும் நகரப்பகுதிகளில் குப்பைத் தொட்டிகளை அமைத்தல், மரம் நடுகை போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

நாளை பகல் 11 மணியளவில் சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்கு வலி. தெற்கு பிரதேச சபைமண்ட பத்தில் நடைபெறவுள்ளது. இதில் வர்த்தகர்கள், பொதுமக்கள், விவசாய சம்மேளன பிரதிநிதிகள், நலன் விரும்பிகளை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (101)

## சிறு செய்திகள்

### மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப்போட்டி!

யாழ்ப்பாணம் —

யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி இன்று முற்பகல் 10 மணிக்கு யா. இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும், பேச்சுப் போட்டி நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும். நடைபெறும் என மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

### அடையாள அட்டை கண்டெடுப்பு!

வேலணை —

புங்குடுதீவு எட்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவச்செல்வம் சிவராஜனி என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டவர் அலுவலக நேரங்களில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### சிகிச்சை நிலையம் இன்று இடமாற்றம்!

யாழ்ப்பாணம் —

யாழ். மவாட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையம் இன்றுமுதல் யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள சுகாதார கிராமத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட காச நோய்த்தடுப்பு வைத்திய அதிகாரி சி.எஸ்.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

### கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு!

வடமராட்சி —

வடமராட்சி கிழக்கு - தாளையடி, மருதங்கேணி ஆகிய பகுதிகளில் முதற்கட்டமாக நாளை வியாழக்கிழமை கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன-

மேற்படி பகுதியிலுள்ள இடைத்தங்கல் முகாம்களிலும் இந்தப் பணி தொடரவுள்ளதால் -

இந்தப் பகுதியிலுள்ளோர் தமது வளர்ப்பு நாய்களை கட்டிவைத்து இந்த செயற்பாட்டுக்கு ஒத்துழைக்குமாறு பருத்தித்துறை பிரதேச சபை செயலர் சி.பசுபதி கேட்டுள்ளார்.



டிஜிற்றல் போட்டோ கொப்பி
$A_4$ - கறுப்பு வெள்ளை - 3.00 ரூபா
$A_4$ - கலர் - 40.00 ரூபா
ஸ்ரீர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/4609)

# சந்திரிகா - அனுரா கருத்துகளால் மகிந்தவை ஆதரிப்போர் குழப்பம்!



கொழும்பு—

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூட்டணி வைத்துக்கொண்டதையடுத்து ஜனாதிபதி சந்திரிகாவும், வெளியுறவு அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவும் தெரிவித்து வரும் கருத்துக்களால் பிரதமர் மகிந்தவை ஆதரிப்போர் குழப்பமடைந்திருப்பதாக ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில் -

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சில கட்சிகளுடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு ஏற்படையதாக இருந்தால் மட்டுமே தாம் ஆதரவு வழங்குதாக அமைச்சர் அனுரா பண்டாநாயக்க தெரிவித்திருந்தார்.

அமெரிக்கா சென்ற ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியதும் ஜனாதிபதித் தேர்தலுக்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைத் தயாரிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தயாரிக்கப்படவுள்ள கொள்கைகளுக்கும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களுக்கும் இடையில் காணப்படும் விடயங்களில் இணக்கம் ஏற்படவில்லை என்றால் சிக்கல் ஏற்படும் எனத் தெரியவருகிறது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதியின் கொள்கைகளுக்குப் பிரதமர் இணங்குவாரானால் பிரதமருடன் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ள கட்சிகள் சிக்கலை எதிர்நோக்கக் கூடும். இந்த விடயம் பாரிய அரசியல் சிக்கல் என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜே.வி.பி. கருத்துத் தெரிவிக்கையில் -

அவ்வாறான நிலை ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதாகத் தெரிவித்த கட்சியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச - ஜனாதிபதி பிரதமர் தொடர்பாக கடுமையான செயற்பாட்டை முன்னெடுப்பார் என தாம் நம்பவில்லை எனவும் தெரிவித்தார்.



இதேவேளை, இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமய -

நாம் ஆதரவு வழங்கியது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அல்ல, மகிந்த ராஜபக்ஷவுக்கே எமது கட்சி ஆதரவு வழங்கியது. இதற்கு ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவிப்பாரானால் கொள்கைகளை வெற்றிபெறச் செய்வதற்கு ஜாதிக ஹெல உறுமய - பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கும் எனவும் தெரிவித்தார். (01)

## கிரனேட் வீச்சில் வயோதிபர் காயம்

திருகோணமலை—

திருகோணமலை - அனுராதபுரம் சந்தியில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரி அருகே நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் வயோதிபர் ஒருவர் காயமடைந்தார். ராமசன் கந்தசாமி (வயது 63) என்ற கிண்ணியா வீதி, பாரதிபுரத்தைச் சேர்ந்தவரே காயமடைந்தவராவர். இந்தச் சம்பவத்தையடுத்து படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

## இராணுவ அதிகாரிகள் குழு பாகிஸ்தானுக்கு விஜயம்!

லாகூர்—

மேஜர் ஜெனரல் எஸ்.ஆர். பாலசூரிய தலைமையிலான 20 இராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இரண்டு நாள் விஜயமாக பாகிஸ்தான் சென்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை லாகூருக்குச் சென்ற இந்தக் குழுவில் பட்டலந்தவில் உள்ள இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் பாகிஸ்தானின் பல்வேறு இராணுவத் தளங்களுக்கும் விஜயம்செய்யவுள்ளதாகவும் தெரியவருகிறது. அத்துடன் இந்திய - பாகிஸ்தான் எல்லையிலுள்ள வாகா பகுதிக்கும் இவர்கள் செல்லவுள்ளனர்.

## புதிய வழிகாட்டு நெறியை தயாரிக்கிறார் சந்திரிகா!


கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக்கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளருக்குப் புதிய வழிகாட்டல் நெறியைத் தயாரிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளார். தனது ஆதரவாளர்களுடன் நீண்டநேரம் நடத்திய கலந்துரையாடலின் பின்னரே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவிற்கு அழைப்பு விடுத்திருந்தார். அத்துடன் தனது புதிய வழிகாட்டல்கள் தொடர்பாக ஆதரவை பெறுவதற்கும் திட்டமிட்டிருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதியின் புதிய வழிகாட்டுதல்கள், சிறிலங்கா சுதந்திரக்கட்சியை பாதிப்பதுடன் - பல பிரிவுகளாக உடைவதற்கும் வழிவகுக்குமென கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## நாடாளுமன்றம் கலைக்கப்படாது; நம்பிக்கை தெரிவிக்கிறார் பிரதமர்!



கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலைத்துவிடமாட்டார் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உடன்பாடு செய்துகொண்டுள்ளதால்- ஜனாதிபதி சந்திரிகா இந்த நடவடிக்கையை எடுக்கக்கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ -

சந்திரிகா நாடு திரும்பியதும் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றும், அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாவிவிடுவார்கள் என்றும் ஊகச்செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தை சந்திரிகா கலைத்து விடமாட்டார். நான் ஜனாதிபதியாக தேர்தெடுக்கப்பட்ட பின்பும்கூட நாடாளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன்.

எமது கட்சி 127 ஆசனங்களுடன் பெரும்பான்மையாக உள்ள நிலையில் ஏன் நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டும்?

தேசப்பற்றுள்ள சக்திகளும் - முற்போக்காளர்களும் என்னை ஆதரிக்கின்றனர். அதனால் தேர்தலில் நான் வெற்றிபெறுவதில் எனக்குச் சந்தேகமும் இல்லை. எதிர்க்கட்சி பரப்புரை செய்வது போல் சுதந்திரக்கட்சியில் முரண்பாடுகள் எதுவும் இல்லை.

ஒட்டுமொத்த சுதந்திரக் கட்சியுமே என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்டுவருகிறது என மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (தே)

## புளொட் அலுவலகம் அருகே நடமாடிய இளைஞர் கைது

கொழும்பு—

பம்பலப்பிட்டியிலுள்ள புளொட் அலுவலகம் அருகே சந்தேகத்துக்கிடமாக நடமாடியதாக, தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டார்.

பம்பலப்பட்டி ஹெய்க் வீதியில் உள்ள புளொட் அலுவலகத்தின் அருகே சந்தேகத்துக்கிடமாக நடமாடியபோதே - வலப்பனையைச் சேர்ந்த ரவீந்திர குமார் என்ற இளைஞர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறு இரவு 9.15 மணியளவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி
# வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு 100 கொத்தணி நிலையங்கள்!

கொழும்பு—

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசிக்கும் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் 100 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்களை அமைத்தால், அவற்றுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். ஆனால், அந்தப் பகுதிகளுக்கு பொலிஸாரை அனுப்ப முடியாது என்பதால், அமைக்கப்படும் வாக்களிப்பு நிலையங்களுக்கான பாதுகாப்பை வழங்கமுடியாதென பொலிஸ்மா அதிபர் மற்றும் முப்படைத் தளபதிகள் கடந்த வாரம், தேர்தல் ஆணையாளருடன் நடந்த சந்திப்பில் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசிக்கும் வாக்காளர்களுக்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுமென தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு அண்மையாக உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இந்த கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும்.

இந்த வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கும், அவர்களுக்கு வேண்டிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென தேர்தல் திணைக்களம் - படையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் திகதிக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டவுடன் பொலிஸ்மா அதிபர் மற்றும் முப்படைத் தளபதிகளுடன் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது குறித்து தேர்தல் ஆணையாளர் கலந்துரையாடவுள்ளார். (தே)

## தேர்தல்கால பணிகளுக்கு கண்காணிப்புக்குழு தயார்

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அரசாங்கம் கேட்டுக்கொண்டால் உதவி செய்யத் தயாராக இருப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ்டொட்டயர் கருத்துத் தெரிவிக்கையில் -

தேர்தலைப் பொறுத்தவரையில் கண்காணிப்புக்குழுவின் பணிகள் மிகக்குறைவுதான். கடந்த தேர்தலிலும்கூட மிகக் குறைவான பங்களிப்புத்தான் செய்தோம்.

தேர்தலின்போது விடுதலைப் புலிகள் மற்றும் அரச தரப்புப் பிரதேசங்களுக்கு இடையேயான சோதனைச் சாவடிகளைக் கண்காணிப்புக்குழு கண்காணிக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை தடைசெய்யும் அவசியமில்லை!
### அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு—

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமெரிக்காவின் சட்ட விதிகளுக்கு உடன்பட்டுச் செயற்படுவதால் அதைத் தடைய செய்யவேண்டிய அவசியம் ஏதுவுமல்லை என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட் தெரிவித்தார்.

அமெரிக்கன் நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத அமைப்புகள் பற்றிய தெளிவான நிலைப்பாடு அமெரிக்காவிடம் உள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டுவருகிறது. எனினும் பயங்கரவாதத்துக்கு உதவி புரிதல், நிதியளித்தல், பயங்கரவாத அமைப்புகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சார்பாகச் செயற்படும் விடயங்கள் தெரியவந்தால் அது பற்றிப் பரிசீலிப்போம்.

அத்துடன் நாங்கள் தமிழர் புன்ர்வாழ்வுக் கழகத்தை மனிதாபிமான தொண்டு நிறுவனமாகவே நோக்குகிறோம். அவர்கள் போரில் ஈடுபடும் அமைப்புகளுக்கு ஆதரவளிப்பது உறுதிப்படுத்தப்படாதவரை சுதந்திரமாகச் செயற்படலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## அரச சேவையிலுள்ள அனைவருக்கும் ஓய்வூதியம்

கொழும்பு—

அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்படும் சகலருக்கும் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரச சேவையில் கடமையாற்றும் சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பேருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்க காலத்தில் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ரத்துச்செய்யப்பட்டதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

# பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்டில் இலங்கை அணி 449 ஓட்டங்கள் குவிப்பு!




கொழும்பு—

பங்களாதேஷ் அணிக்கு எதிராக கொழும்பு சரவணமுத்து மைதானத்தில் நேற்று ஆரம்பமாகிய இரண்டாவது டெஸ்ட் போட்டியில் - இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 449 ஓட்டங்களைக் குவித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

தனது நூறாவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய ஜெயசூரியவும், அத்தபத்துவும் பெரும் எதிர்பார்ப்புடன் தொடக்க வீரர்களாகக் களம் புகுந்தனர். ஆனால் இருவருமே ஸ்கோர் 28ஆக இருந்தபோது அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

ஜெயசூரிய 23 பந்துகளில் 13 ஓட்டங்களையும், அத்தபத்து 20 பந்துகளில் 11 ஓட்டங்களையும் எடுத்தனர்.

அடுத்து பலத்த எதிர்பார்ப்புடன் களமிறங்கிய ஜெயவர்த்தனவும் 2 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.

இதையடுத்து சங்கஹாரவுடன் சமரவீர இணைந்து கொண்டார். ஆனாலும் ஸ்கோர் 48ஆக இருந்தபோது நான்காவது விக்கெட்டாக சங்கஹார 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததால், இலங்கை அணி பெரும் நெருக்கடிக்குள்ளானது.

இந்தநிலையில் சமரவீரவுடன், டில்ஷான் இணைந்து கொண்டார். இருவரும் பொறுப்புடன் ஓட்டங்களைக் குவித்து சதமடித்தனர்.

இருவரும் இணைப்பாட்டமாக 280 ஓட்டங்களைக் குவித்ததால் - இலங்கை அணி அபாயக் கட்டத்திலிருந்து மீண்டது.

ஸ்கோர் 328ஆக இருந்தபோது



- அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்த டில்ஷான், அப்ரப் அகமதின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். 179 பந்துகளில் 19 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 168 ஓட்டங்களைக் குவித்தார்.


அடுத்து சமரவீரவுடன் சமிந்த வாஸ் இணைந்து நிதானமாகவும், அதிரடியாகவும் ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்தார்.

இதனால் ஸ்கோர் 397ஆக உயர்ந்தது. அவ்வேளை, சமரவீர ஆறாவது விக்கெட்டாக வீழ்த்தப்பட்டார்.

இவர் 217 பந்துகளில் 20 பவுண்டரிகளுடன் 138 ஓட்டங்களைக் குவித்தார். இதன்பின்னர் களமிறங்கிய ஹேரத், ஸ்கோர் 400ஆக இருந்தபோது - ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து சென்றார்.

இதையடுத்து முரளிதரன் களமிறங்கி வாஸுடன் இணைந்து அதிரடி ஆட்டம் ஆடினார். நேற்றைய ஆட்டநேரமுடிவில் இலங்கை அணி 90 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 449 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

சமிந்த வாஸ் 57 பந்துகளில் 10 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 61 ஓட்டங்களையும், முரளிதரன் 21



பந்துகளில் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 24 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

26 உதிரி ஓட்டங்களைக் கொடுத்த பங்களாதேஷ் அணி சார்பில் ரசல் 3, சதாத் ஊசேன் 3, அப்ரப் அகமத் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

விளையாட்டு

# உடுப்பிட்டி நவஜீவன்ஸ் நடத்திய கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்!

உடுப்பிட்டி—

வடமராட்சி கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

செற்றப் போட்டியில் உடுப்பிட்டி சிவகுமாரன் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. இதில் முதல் இரு சுற்றுக்களிலும் உடுப்பிட்டி சிவகுமாரன் அணி 25:21, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்ற அதேவேளை, 3ஆம் சுற்றில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இதனால், இரு அணிகளும் நான்காம் சுற்றில் மோதின. இதில் உடுப்பிட்டி சிவகுமாரன் அணி 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இதனால் உடுப்பிட்டி சிவகுமாரன் அணி உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. இதில் ஆட்டநாயகனாக உடுப்பிட்டி சிவகுமாரன் அணியைச் சேர்ந்த எஸ்.சுமன் தெரிவுசெய்யப்பட்டார்.

அடுத்து 4 பேர் கொண்ட ஓவர் கேம் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து வல்வெட்டி குணசேகரா அணி மோதியது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி, குணசேகரா அணியை 35:31 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனானது.

இதில் ஆட்டநாயகனாக உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியைச் சேர்ந்த ரி.தங்கேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்து 6 பேர் கொண்ட போட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, உடுப்பிட்டி சிவகுமாரன் அணி மோதியது. இரு அணிகளும் 3 சுற்றுக்கள் விளையாடியபோது இரு சுற்றுக்களில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும், ஒரு சுற்றில் உடுப்பிட்டி சிவகுமாரன் அணியும் வெற்றிபெற்றன.

இதனால், இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை தனதாக்கியது. இதில் ஆட்ட நாயகனாக இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இ.திவாகரன் தெரிவு செய்யப்பட்டார். (12)

## வி.ரி.ஜெயரட்ணசிங்கம் கிண்ண கிரிக்கெட்

# அரையிறுதி ஆட்டத்துக்கு யங்ஸ்ரார் அணி தெரிவு!

யாழ்ப்பாணம்—

வி.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்துக்கு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி தகுதி பெற்றது.

சென்றல் விளையாட்டுக் கழகம் 3ஆவது ஆண்டாக நடத்தும் 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடுவதற்குத் தீர்மானித்தது.

யங்ஸ்ரார் அணி 46 ஓவர்களில் 311 ஓட்டங்களைப் பெற்றது. சுஜீவன் 98, சதீஸ்கண்ணா 30, துஸ்யந்தன் 47, தினேஷ் 67 ஓட்டங்களைப் பெற்றனர்.

யாழ்.சென்றல் அணி சார்பாக றஜீவ்குமார் 5, கலிஸ்ரன் 2, பாலகுமார் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி 31.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றஜீவ் 48, சுரேஸ்ராஜா 15, சுதா 10 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் றஜீத் 3, சசிவர்ணன் 3, சுதா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதில் வெற்றிபெற்ற யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி, அரையிறுதிப் போட்டியில் - பற்றீசியன் விளையாட்டுக்கழக அணியுடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணி அடுத்தமாதம் 2ஆம் திகதி மானிப்பாய் பரிஷ் அணியுடன் இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும்.

# யாழ்.மாகாண சதுரங்க போட்டி; பதக்கங்கள் வென்ற வீரர்கள்!

யாழ்ப்பாணம்—

கடந்த 17ஆம் திகதி யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் யாழ்ப்பாண சதுரங்கச் சம்மேளனம் நடத்திய மாகாணமட்டத் தெரிவுப் போட்டியில் பதக்கங்களை வென்ற வீரர்கள் வருமாறு -

9 வயது ஆண்கள் -

சோதிநாதன் சஞ்சயன் - தங்கப் பதக்கம் (தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), பாலசுந்தரம் ஆதீபன் - வெள்ளிப்பதக்கம் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), அலோசியஸ் ஜன்ஸ்ரீன் - வெண்கலப்பதக்கம் (புனித பொஸ்கோ பாடசாலை).

11 வயது ஆண்கள் -

அலோசியஸ் ஒஸ்ரின் - தங்கப் பதக்கம் (யாழ்.இந்துக் கல்லூரி), பரமநாதன் மகிதனன் - வெள்ளிப் பதக்கம் (யாழ்.இந்துக் கல்லூரி), அபிராம் சயந்தன் - வெண்கலப்பதக் கம் (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி).

13 வயது ஆண்கள் -

சிவகணேசன் அரவிந் - தங்கப் பதக்கம் (ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை), ஜெகதீஸ்வரன் ஜெனன் - வெள்ளிப்பதக்கம் (ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை), சுகுமாரன் சுதர்சன் - வெண்கலப்பதக்கம் (ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை).

15 வயது ஆண்கள் -

ரூபேட் மரியதாஸ் ஜெரூசன் - தங்கப்பதக்கம் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை), சோதிநாதன் விஷ்ணுச் சந்தர் - வெள்ளிப்பதக்கம் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை), ஜெயபால சிங்கம் திரோஜன் - வெண்கலப்பதக் கம் (யாழ்.இந்துக் கல்லூரி).

20 வயது ஆண்கள் -

நாகேந்திரன் ஐங்கரேசன் - தங்கப்பதக்கம் (யாழ்.இந்துக் கல்லூரி), தேவானந்தம் கமலச்சந்திரன் - வெள்ளிப்பதக்கம் (வேலாயுதம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை), மகாதேவா கலாரூபன் - வெண்கலப் பதக்கம் (யாழ்.இந்துக் கல்லூரி).

மேற்படி போட்டியாளர்கள் யாழ். மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத் தெரிவுப் போட்டிக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் போட்டியாளர்கள் ஆசிய மட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

பெண்கள் பிரிவில் 9, 11, 13, 15, 20 வயதுப் பிரிவுகளில் மாகாண மட்டத் தெரிவுப் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும். இதில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் 1ஆம், 2ஆம், 3ஆம் இடத்தைப் பெறும் வீராங்கனைகளுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கங்கள் வழங்கப்படுவதுடன், இலங்கைச் சதுரங்கச் சம்மேளனத்தின் நற்சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

அத்துடன் தேசிய மட்டத் தெரிவுப் போட்டிக்கும் அனுமதிக்கப்பட்டு, அதில் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் ஆசியமட்டப் போட்டிக்கும் அனுமதிக்கப்படுவரென யாழ்ப்பாண சதுரங்கச் சம்மேளனம் அறிவித்துள்ளது.

# இர்பான் பதானின் பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சுருண்டது!



ஹராரே—

இந்திய அணிக்கு எதிராக ஹராரேயில் நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சிம்பாப்வே அணி முதல் இனிங்ஸில் 161 ஓட்டங்களுக்குள் சுருண்டது.


இந்திய அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பில் ஈடுபடத்தீர்மானித்தது. ஸ்கோர் 4ஆக இருந்தபோது - முதல் விக்கெட்டை இழந்த சிம்பாப்வே அணி, அடுத்து ஸ்கோர் 31ஆக இருந்தபோது அடுத்தடுத்து மூன்று விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

பின்னர் சுதாகரித்து ஆடமுற்பட்ட சிம்பாப்வே வீரர்கள், ஸ்கோர் 75ஆக இருந்தபோதும், 79ஆக இருந்த



போதும் அடுத்தடுத்து இரு விக்கெட்டுக்களை இழந்தனர்.

பின்னர் ஸ்கோர் 122, 136, 138, 161ஆக இருக்கும்போது மேலும் நான்கு விக்கெட்டுக்களை இழந்து ஆட்டமிழந்தது.



44.2 ஓவர்களில் 161 ஓட்டங்களுக்குள் சிம்பாப்வே அணி சுருண்டது. ரெய்லர் 4, டபின் 12, இப்ராகிம் 14, தைபு 0, மசகட்சா 27, ஸ்ரிக் 14, கொவென்ரி 37, பிளிக்நெட் 13, டபங்வா 18, மகவிர் 1, வயங்கா 14 (ஆட்டமிழக்காமல்) ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

பந்துவீச்சில் இர்பான் பதான் 7 விக்கெட்டுக்களையும், ஹர்பஜன் 2 விக்கெட்டுக்களையும், சகீர்கான் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம்—

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் -

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அராலி சில்வெஸ்டர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

25. "சத்திய ஞான தரிசினி" என்ற தீட்சா நாமம் பெற்றவர்
1. மறைஞானசம்பந்தர்
2. உமாபதி சிவாச்சாரியார்
3. அருணந்தி சிவாச்சாரியார்
4. மனவாசகம் கடந்ததேவர்

26. ஆன்மாக்களின் ஐந்துவகையான அவஸ்தை நிலையில் "துரியம்" குறித்து நிற்பது
1. உயிர்ப்பு அடக்கநிலை 2. கனவுநிலை
3. நனவு நிலை 4. உறக்கநிலை

27. இறைவனின் எண்குணங்களில் "அனந்த சக்தி" குறிப்பது
1. தன் வயத்தன் ஆதல் 2. பேரருளுடமை
3. வரம்பிலின்பவுடமை 4. முடிவிலாற்றலுடமை

28. வண்ணக்கர் எனப்படுவோர்
1. கோயிற் பூசகர் 2. கோயிற்காவலர்
3. கோயிற் பரிபாலகர் 4. கோயிற் தொண்டூழியர்

29. "தமிழ் ஆகமம்" எனச் சிறப்பிக்கப்படும் நூல்
1. வேதம் 2. ஆகமம் 3. புராணம் 4. திருமந்திரம்

30. சாந்தமும், அமைதியும் நிறைந்த குணம்
1. தாமதகுணம் 2. சத்துவகுணம்
3. இராசதகுணம் 4. நிர்க்குணம்

31. கல்யானை துதிக்கையை நீட்டி இறைவன் முன் எடுத்துவைத்த நூல்
1. திருவுந்தியார் 2. திருக்களிற்றுப்படியார்
3. கந்தபுராணம் 4. ஆகமங்கள்

32. சித்தாந்த சாஸ்திரங்களில் நடுநாயகமாக விளங்குவது
1. சிவஞானசித்தியார் 2. உண்மை விளக்கம்
3. சிவஞானபோதம் 4. திருவருட்பயன்

33. சங்கார ருத்திரமூர்த்தி எனப்படுபவர்
1. வைரவர் 2. முருகன் 3. வீரபத்திரர் 4. விஸ்ணு

34. உயிரானது முற்பிறப்புகளில் செய்த வினைகளில் இப்பிறப்பில் அனுபவிக்கும் பகுதிக்கு வழங்கும் பெயர்
1. சஞ்சிதம் 2. பிராரர்த்துவம் 3. ஆகாமியம் 4. கன்மம்

35. இறைவனுக்கு ஒரு பச்சிலை, பசுவிற்கு ஒரு வாயுறை, உண்ணும் பொழுது ஒரு கைப்பிடி இனியவை பேசுதல் என்பவற்றை யாவர்க்குமுரிய அறமாகக் கூறும் நூல்
1. திருமந்திரம் 2. திருவருட்பயன்
3. திருக்களிற்றுப்படியார் 4. திருவாசகம்

36. கார்த்திகை மாத தேய்பிறைப்பிரதமை தொடக்கம் மார்கழி மாத வளர்பிறை சஷ்டிவரை அனுஷ்டிக்கப்படும் விரதம்
1. விநாயகவிரதம் 2. விநாயகர் சஷ்டிவிரதம்
3. திருக்கார்த்திகை விரதம் 4. மார்கழித்திருவாதிரை

37. "மூவர் தமிழும் திருநான்மறை முடிபே" எனக் குறிப்பிட்டவர்
1. காசிவாசி செந்திநாதஐயர் 2. ஔவையார்
3. திருமூலர் 4. மணிவாசகர்

38. திருக்கழுமலம் எனச் சிறப்பிக்கப்படும் பதி
1. திருச்செங்காட்டங்குடி 2. திருமருகல்
3. கோகர்ணம் 4. சீர்காழி

39. மணிவாசகர் பாடிய திருவாசகத்தில் உள்ள "நீத்தல் விண்ணப்பத்தின்" முதலாவது பாடல்
1. போற்றி என் வாழ்முதல்... 2. கடையவனேனைக்...
3. ஏகநாயகனை... 4. செங்கணா போற்றி...

40. "வேதாந்த தெளிவாம் சைவசித்தாந்தம்" எனக் குறிப்பிட்டிருக்கும் நூல்
1. சிவப்பிரகாசம் 2. சிவஞான சித்தியார்
3. இருப்பா இருபஃது 4. திருமந்திரம்

**செல்வி.ட.கௌரி**

# தமிழ்மொழி

☆ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) காவேரி முண்டகக்கன்னியை வழிபட்டாள். இங்கு **முண்டகம்** என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்
1.ஆம்பல் 2.செல்வல்லி 3.தாமரை 4.கருங்குவளை

2) அதிராம்பட்டினத்தில் பஞ்சம் நிலவியது. இங்கு **பஞ்சம்** என்பதன் கருத்தைத் தரும் வேறொரு சொல்.
1.வற்கடம் 2.ஆற்றொணா 3.காழ்ப்பு 4.பைங்கூழ்

3) வித்தகன் அழகனாகத் திகழ்ந்தான் **அழகன்** என்பதன் எதிர்ப்பதம்
1.கிளைஞன் 2.பாதகன் 3.குரூபி 4.நாத்திகன்

4) சாணக்கியன் ஒரு நிபுணனாயிருந்தான். **நிபுணன்** என்பதன் எதிர்ப்பாற் சொல்
1.நிசாசரி 2.நீலி 3.நிபுணத்தி 4.நிபுணை

5) நுணலும் தன்வாயாற் கெடும். என்பதிலுள்ள **நுணல்** என்பது
1.வண்டு 2.கீரி 3.தவளை 4.புறா

☆ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பெருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6) வாதம், பித்தம், சிலேட்டுமம் என்பவற்றைக் குறிக்கும் தொகைப் பெயர்
1.முப்பொறி 2.முப்பிணி 3.முச்சுடர் 4.முக்குற்றம்

7) காவல், வாசனை, சிறப்பு, களிப்பு, அச்சம் ஆகிய பல பொருள் தரும் ஒரு சொல்
1.கடி 2.சிறை 3.கலி 4.கண்ணி

8) பெண்ணோ சுற்றத்தவரோ உடன்படாது வலிந்து கொள்ளும் மணம்
1.காந்தர்வம் 2.இராக்கதம்
3.சுயம்வரம் 4.பதிவுத்திருமணம்

9) பிணா என்பதன் ஆண்பால் மரபுப் பெயர்
1.கலை 2.குண்டு 3.போத்து 4.அலவன்

10) ஓரை, யவனர் என்பவை
1.பிரான்சிய மொழிச் சொற்கள் 2.கன்டை மொழிச் சொற்கள்
3.தெலுங்கு மொழிச் சொற்கள் 4.கிரேக்க மொழிச் சொற்கள்

11) ஒட்டக்கூத்தர் மகா கவீந்திரராக விளங்கினார். மகா கவீந்திரர் என்றால்
1.கவி பாடுவதில் தலை சிறந்தவர் 2.கவி பாடத் தெரியாதவர்
3.கவிதைக்கு உரை கூறுபவர் 4.பணத்துக்காக கவி பாடுபவர்

12) எயிட்ஸ் (AIDS) என்பதற்குப் பொருத்தமான கலைச் சொல்
1.வைரஸ்நோய் 2.ஆள்க்கொல்லி
3.ஏமக்குறைவு நோய் 4.காசநோய்

13) மருந்து மாயமெல்லாம் அவனுக்குத் தெரியாது. இவ்வாக்கியத்திலுள்ள மருந்து மாயம் என்பது
1.இரட்டைமொழி 2.அடுக்குமொழி
3.அடுக்கிடுக்கு மொழி 4.இணைமொழி

14) கண் புதைத்தல் என்ற இலக்கணத்தொடரின் குறிப்புப் பொருள்
1.அறிவுகெடுதல் 2.விழித்தல்
3.கோபத்தால் கண் சிவத்தல் 4.கண்ணைக் கவருதல்

15) 'முற்றாய் விலக்கல்' என்ற உட்பொருள் தரும் மரபுத் தொடர்
1.கையிடல் 2.கைகூடல்
3.கைகழுவுதல் 4.கண்ணெறிதல்

16) 'இறைத்த கிணறே ஊறும். இறையாத கிணறே நாறும்' என்ற பழமொழியால் உணர்த்தப்படுவது
1.கிணறு இறைப்பதுஅவசியம் 2.தருமத்தின் பெருமை
3.காலம் மாறிவரும் 4.பணவலிமை

17) 'அச்சமின்றி உண்மை கூறுவோன் பிறரது வெறுப்புக்கு ஆளாவான்' என்ற கருத்தை உணர்த்தும் பழமொழி
1. இச்சமில்லாதவன் அம்பலமேறுவான்
2.குற்றம் பார்க்கின் சுற்றமில்லை



3.தன்தற்பம் தனக்கே தெரியும் 4.எதிர்த்துவாதி வெகுசனவிரோதி

18) நிலையில்லாத வாழ்க்கையை விளக்கும் பொருத்தமான உவமைத் தொடர்
1.ஆற்றிலே கரைத்தபுளி போல 2.நீர்க்குமிழிபோல
3.கல்லின்மேல் எழுத்துப் போல 4.ஓடும் புளியம்பழமும் போல

19) 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடிய புறநானூற்றுக் கவிஞன்
1.பூதந்தேவனார் 2.வள்ளுவர்
3.கணியன் பூங்குன்றன் 4.பெய்கையார்

20) பல்கலைக்கழகத்தில் அதிகாரம் பெற்ற தலைவர்
1.முதலமைச்சர் 2.அதிபர் 3.பொறுப்பாளர் 4.துணைவேந்தர்

☆ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

21) பின்வருவனவற்றில் அகச் சுட்டாக அமைவது
1.இவை 2.அம்மனை 3.அவன் 4.அந்த நாடு

22) ஆகாயத்தில் விமானம் பறந்தது. இதில் இடம்பெறும் வேற்றுமைப் பொருள்
1.எல்லைப் பொருள் 2.ஒப்புப்பொருள்
3.ஏதுப் பொருள் 4.இடப்பொருள்

23) விட்டிசைக்குறிப்பைக் கொண்டிருப்பது
1.கண்ணன் எங்கே?
2.அம்பு, பாவம், கடகம் முதலான பேராயுதங்களுடன் சென்றான்
3.குறுங்கண் – சாளரம்
4.பாவம் வாயில்லாப்பிராணி

24) எண் வழுவாக அமைவது
1.குமார் வந்தான் 2.நேற்று வருவான்
3.கண்ணன் வந்து 4.புற்கள் செழித்து வளர்ந்தது

25) பின்வருவனவற்றுள் வழுவற்ற வாக்கியம்
1.பாதம் பூமியைப் புண்ணிய பூமி என்பர்
2.அவன் எண்ணை வரச்சொன்னான்
3.குமரன் கடையில் பந்து வேண்டினான்
4.வேலைகையின் அருகே நின்ற வேடனைக் கண்டேன்

26) பின்வருவனவற்றுள் உண்மைத்தொகையாக அமைவது
1.பாய்புலி 2.வேற்கண் 3.கைகால் 4.மெய்க்கீர்த்தி

27) தற்காலத்தில் முன்னிலை மரியாதை ஒருமையாக வழங்கிவரும் பன்மைப் பெயர்
1.நீவிர் 2.நீர் 3.எல்லீர் 4.நீயீர்

28) இறந்தகால இடைநிலையைக் கொண்டிருக்கும் பகுபதம்
1.ஓடிற்று 2.பாடுவார் 3.படித்தான் 4.புக்கான்

29) கை+நூல் என்பதைப் புணர்த்தினால் வரும் புணர்மொழி வடிவம்
1.கைம்நூல் 2.கைநூல் 3.கைநூல் 4.கைந்நூல்

30) உயர்திணை ஆண்பால் சிறப்புப் பெயர்களாவன
1.நங்கை, தையல் 2.களை, ஏறு
3.பிணா, பிடி 4.குரிசில், விடலை

☆ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31) வியாபாரிகள் ஒவ்வொருவரும்.
1.தங்கள் கடமையைச் செய்தனர் 2.தம் கடமையைச் செய்தனர்
3.தத்தம் கடமையைச் செய்தனர் 4.தமது கடமையைச் செய்தனர்

32) நீ கவனமாகப் படித்தாயானால்
1.பரீட்சையில் சித்தியடைகிறாய் 2.பரீட்சையில் சித்தியடைவாய்
3.பரீட்சையில் சித்தியடையவில்லை 4.பரீட்சையில் சித்தியடையமாட்டாய்

33) வாக்குக் கேட்டு வந்த அரசியல் வாதிகள்
1.பல வாக்குறுதிகளை வெளியிட்டது
2.பல வாக்குறுதிகளை வெளியிட்டனர்
3.பல வாக்குறுதிகளை வெளியிட்டன
4.பல வாக்குறுதியை வெளியிட்டனர்

34) பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழைகளற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க
1.இஸ்லாமிய அறிஞ்சர் பலர் தமிழிலக்கியத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனர்
2.இஸ்லாமிய அறிஞ்ஞர் பலர் தமிழிலக்கியத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனர்
3.இஸ்லாமிய அறிஞர் பலர் தமிழிலக்கியத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனர்
4.இஸ்லாமிய அறிஞுர் பலர் தமிழிலக்கியத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனர்

35)
1. ஈழ நாட்டுத் தமிழிச்சி நெய்தலமுதை விஞ்சினாள்
2. ஈழ நாட்டுத் தமிழிச்சி நெய்தலமுதை மிஞ்சினாள்
3. ஈழ நாட்டுத் தமிழிச்சினி நெய்தலமுதை விஞ்சினாள்
4. ஈழ நாட்டுத் தமிழிச்சினி நெய்தலமுதை மிஞ்சினாள்

☛ பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

"திங்கள் முடி சூடுமலை
தென்றல் விளையாடும் மலை
தங்கும் முகில் சூழு மலை
தமிழ் முனிவன் வாழுமலை
அங்கற்கண் அம்மை திரு
அருள் சுரந்து பொழிவதென
பொங்கருவி தூங்கும் மலை
பொதிய மலை எம்மலையே"

36) கவிஞர் இந்தப் பாடலின் மூலம் தெளிவுபடுத்துவது
1.இந்தியாவில் அதிக மலைகள் உண்டு
2.சந்திரன் மலைகளில் குளிர்ச்சியை ஏற்படுத்துகிறான்
3.பொதிய மலையின் சிறப்பு
4.அங்கயற்கண்ணியின் அருட்சிறப்பு

37) 'திங்கள் முடிசூடுமலை' என்ற தொடரின் பொருள்
1.சிவபிரான் சந்திரனையும் மலையையும் சூடியுள்ளார்
2.மலையின் முகட்டிலே சந்திரனது ஒளி பிரதிபலித்தது
3.பொதிய மலையில் சந்திரனது ஒளி விழுவதில்லை
4.மலையின் முடியிலே வெண்மதி தவழும்

38) இப்பாடலினுள்ள தென்றல் என்ற சொல்லின் ஒத்த பதம்
1.வாடை 2)மந்தமாருதம் 3)புயல் 4)சோளை

39) பாடலிலுள்ள சொற்களுள் பெயராகவும், வினையாகவும் வரக் கூடியது
1.முகில் 2.திங்கள் 3.மலை 4.தூங்கும்

கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40)
அ. அந்த வலியை மாற்றாமல் தமது பிராரத்துவம் என்று கருதி அதை அனுபவித்துக்கொண்டு வந்தார்.
ஆ. அவருக்கு ஒரு வகை வயிற்றுவலி இருந்தது
இ. மாணவர்களுக்கு பாடஞ் சொல்லும் போது மாத்திரம்
ஈ. அருணந்தி சிவாச்சாரியார் ஒரு மகான்
உ. அவர் அந்த வலியை அங்கவஸ்திரத்தால் ஆவாகணம் பண்ணிப் பக்கத்தில் வைத்து விடுவார்.
1.ஈ,ஆ,உ,இ,அ 2.ஆ,அ,இ,உ,ஈ
3.ஈ,ஆ,அ,இ,உ 4.ஈ,அ,இ,உ,ஆ

## பகுதி - II

01) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

அ. இன்றைய உலகில் கணினி மிக முக்கியமானதாகிவிட்டது. ஆனால் பண்டைக் காலங்களில் மனிதன் இயந்திரமாக உழைத்தான். தற்காலத்தில் பணிகள் இலகுவாக்கப்பட்டதும் மனிதனது செயல் வேகம் குறைந்திருக்கிறது. எனினும் கணினி மூலமாகப் பல்வேறுபட்ட நன்மைகளையும் மனிதன் அனுபவிக்கிறான். உலக நாடுகளில் கணினித்துறை வளர்ச்சியடைந்துள்ளமை போன்று இலங்கையில் வளர்ச்சி காணாமைக்கான காரணங்களும் உண்டு. இந்த விடங்களை ஆராய்ந்து ஒரு விளக்கக் கட்டுரை.

# இராணுவத்தினரின் புதிய நடைமுறைக்கு வடமராட்சி கடற்தொழிலாளர்கள் எதிர்ப்பு

வடமராட்சி —

வடமராட்சிப் பகுதியில் கடற் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் இராணுவச் சோதனைச்சாவடியில் பாஸ் அனுமதி பெற்றே செல்லவேண்டும் என படையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

இதற்காக மீனவரின் புகைப்படம் பொறித்த அடையாள அட்டைகளை இராணுவத்தினர் வழங்கி வருகின்றனர். இராணுவத்தினரின் இந்தப் புதிய நடைமுறைக்கு மீனவர்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை முனை கடற்தொழிலாளர் சங்கத்தின் தலைவரை அழைத்த காவல் நிலைய இராணுவ இராணுவ அதிகாரி - முன்னர் பாஸ் அனுமதி பெறுவதற்காக வழங்கிய புகைப்படத்தையும், மீனவரின் கையெழுத்தையும், மீனவர் சங்கத் தலைவரின் கையெழுத்தையும் கணினியின் உதவி கொண்டு தயாரித்த ஒருதொகை அடையாள அட்டைகளை வழங்கியதுடன், இதனைப் பயன்படுத்தியே இனிமேல் கடற் தொழிலுக்குச் செல்லமுடியும் என அறிவுறுத்தினர்.

இராணுவத்தினரின் புதிய நடைமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்த சங்கத் தலைவர் - அடையாள அட்டைகளை மீளவும் குறித்த அதிகாரியிடம் கையளித்ததோடு, இந்த நடைமுறைக்கு மக்களும் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

தமது புதிய நடைமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையால் ஆத்திரமடைந்த குறித்த படை அதிகாரி - இந்த நடைமுறையை உடன் அமுல்படுத்த வேண்டும் என்றும்,

இல்லாவிடின் தலை வரை சுடுவோம் எனத்தெரிவித்தாராம்.

இதனை அடுத்து வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாசம் - போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழு, மனித உரிமைகள் ஆணைக் குழு ஆகியோரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

### பணிசுக்குள் பல்லி இருந்த சம்பவம்

# பேக்கரி உரிமையாளருக்கு மூவாயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம் —

பணிசுக்குள் பல்லி இருந்த சம்பவம் தொடர்பாக குறிப்பிட்ட பேக்கரி உரிமையாளருக்கு மூவாயிரம் ரூபா தண்டப்பணமும், பேக்கரியை சுத்தப்படுத்துவதற்கு ஒரு மாதகால அவகாசமும் வழங்கப்பட்டது. பணிஸினுள் பல்லி இருந்ததாக யாழ்.நகரத்தில் உள்ள கடை ஒன்றில் நுகர்வோர் ஒருவரால் கடைக்காரருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்தக் கடைக்காரரர் சம்பவம் தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு தெரிவித்தார். சம்பவம் தொடர்பாக விசாரித்த பொது சுகாதார பரிசோதகர் - பணிஸினுள் பல்லி இருந்தமை, திறந்த நிலையில் கேக் இருந்தமை, சுகாதாரம் பேணப்படவில்லை எனத் தெரிவித்து மூன்று வழக்குகளை நீதிமன்றில் தாக்கல் செய்தார். இந்த வழக்குகளை யாழ். மேல திக நீதிவான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது முதலில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை. இதனை அடுத்து சம்பவ இடத்தை மேலதிக நீதிவான் நேரில் சென்று பார்வையிட்டார். அங்கு மா குழைக்கும் இடம் சுகாதாரம் அற்றுக் காணப்பட்டதுடன், தண்ணீர் சுத்த மற்று காணப்பட்டது. பேக்கரியின் கீழ்ப் பகுதி சீமெந்து போடப்படாமல் காணப்பட்டது. இவ்வாறு பல சுகாதார சீர் கேடுகள் காணப்பட்டதை அடு த்து பேக்கரி உரிமையார்ளர் நீதிமன்றில் தான் குற்றவாளி என ஒப்புக் கொண்டதற்கு அமைய ஒவ்வொரு குற்றத்துக்கும் தலா 1000ரூபா குற்றப் பணமும் 1 மாதகாலத்தினுள் பேக்கரி சுத்தம் செய்யப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

# தூவல் நீர்ப்பாசனக் கருவிகள் மானிய அடிப்படையில் !

சுதுமலை —

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுமார் 100 விவசாயிகளுக்கு யு.என்.டி.பி. நிறுவனத்தால் மானிய அடிப்படையில் தூவல் நீர்ப்பாசன இயந்திரங்கள் விரைவில் வழங்கப்படவிருப்பதாகவும் - இதற்குப் பொருத்தமான பயனாளிகளைத் தெரிவு செய்து தருமாறு அந்தப் பகுதி விவசாய அமைப்புக்களிடம் கமநல சேவை உதவி ஆணையாளர் கோரியுள்ளார்.

தூவல் நீர்ப்பாசன இயந்திரம் பொருத்தப்படுவதன் மூலம் வெங்காயம், கறிமிளகாய், புடோல் போன்ற பயிர்களின்அரை மடங்கு அதிகமான விளைச்சலைப் பெறமுடியும் .

இந்த வகையான உபகரணங்கள் ஏற்கனவே - இந்தப் பகுதியைச் சேர்ந்த 8 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மேலதிகமாக 100 பேருக்கு இந்த இயந்திரத்தை மானிய அடிப்படையில் வழங்க யு.என்.டி.பி. நிறுவனம் முன்வந்துள்ளது. எனவே இவர்களின் விபரங்களை உடனடியாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (44)

# வங்கிகளின் வளர்ச்சிக்கு வாடிக்கையாளர்களின் ஒத்துழைக்கும் மனப்பான்மையே அத்தியாவசியம்

## முன்னாள் வடவலய உதவிப் பொது முகாமையாளர் சிவபாதவிருதயர்

சங்கானை —

அகில இலங்கை ரீதியிலே சங்கானை மக்கள் வங்கி பல சிறப்புகளைக் கொண்டு விளங்கிவருகிறது. இந்த வங்கியின் வாடிக்கையாளர்களின் பங்களிப்புச் செயற்திறனே இதங்குக் காரணமாகும். மேலதிகக் கடன் என்றாலும், ஏனைய கடன் என்றாலும் வாடிக்கையாளரால் பெறப்பட்ட கடன்கள் யாவும் எதுவித நிலுவையுமின்றி காலாகாலத்தில் வசூல் செய்யப்பட்டு, வங்கி வளர்ச்சி கண்டுள்ளது.

இந்த வங்கியின் வளர்ச்சிக்கு வாடிக்கையாளர்கள் கைகொடுத்துதவி வருகின்றனர் என மக்கள் வங்கியின் முன்னாள் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் க.சிவபாதவிருதயர் தெரிவித்தார்.

சங்கானை மக்கள் வங்கியின் முகாமையாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்களால் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண உதவிப் பிரதேச முகாமையாளர்களாகப் பதவி வகித்து பிரதேச முகாமையாளராக வன்னிப் பிரதேசத்துக்குச் சென்றுள்ள கே.ஆனந்தராஜாவுக்கும், யாழ்ப்பாணப் பிரதேச முகாமையாளராக நியமிக்கப்பட்டிருக்கும் து.ரகுவுக்கும் நடத்தப்பட்ட பாராட்டுவிழா வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

நாங்கள் மனிதர்களாக இருக்க வேண்டும். மார்க்கின் கார்க்கி என்ற விஞ்ஞான மனிதன் இப்போது மீன் போல நீந்துகின்றான். பறவைகள் போல் பறக்கின்றான். இப்படிப்பலபல விடயங்களை செய்கின்றான் என விஞ்ஞானக் கருத்தரங்குகளிலே கூறிய போது ஒரு கமக்காரன் எழுந்து ஒரு கேள்வியைக் கேட்கின்றான். மனிதன் நீந்துகின்றான். பறக்கின்றான் எனக் கூறுகின்றீர்கள்.

ஆனால் மனிதன் மனிதனைப் போல எப்ப இருப்பான் எனக் கேட்டால், மனிதனைப் போல இருப்பதற்கு மனிதன் தெய்வீகப் பண்பு கொண்டவனாக இருக்க வேண்டும் என ஒரு திரைப் பாடலைக் கேட்டிருக்கிறோம். அன்பு, கருணை, பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை இருக்க வேண்டும்.

நல்லவற்றையே நினையுங்கள், நல்லவற்றையே செய்யுங்கள் தீயதை நினைக்காதீர்கள் தீயதைப் பேசாதீர்கள் ஏனென்னால் தீயது எங்களுக்குள்ளேயே இருக்கப்போகிறது.

இது எங்களுக்குப் பிரச்சினையாக இருக்கும் நாங்கள் சிரிப்போம், சிந்திப்போம், மற்றவர்களுக்கு உதவி செய்து அவர்களையும் மகிழ்வாக வைத்திருப்போம் எனத் தெரிவித்தார்.

இந்த விழாவுக்குத் தலைமை தாங்கிய சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொன். அச்சுதம்பிள்ளை தனது தலைமையுரையில் -

இவர்களுக்கான இந்தப் பாராட்டு விழா இவர்களின் சேவைக்கு நாம் அளிக்கும் கௌரவமாகும். இவர்களின் உதவியும் ஒத்தாசையும் இல்லையென்றால், இந்த வங்கி இவ்வாறான வளர்ச்சியைப் பெற்றிருக்க முடியாது.

அத்துடன் இந்த வங்கியின் வாடிக்கையாளர்களின் செயற்பாட்டுத் திறன் எமக்கு ஊக்கத்தைக் கொடுத்து வருவதால், எந்தவிதப் பிரச்சினைகளும் இல்லாமல் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிகிறது.

ஒரு வங்கியின் என் னென்ன தேவைப்பாடுகள் அவசியமோ அவற்றை எமக்கு கேட்கிற நேரத்தில் அளித்து, வங்கியின் வளர்ச்சிக்கு துணை நின்றவர்கள் இவர்கள்.

வாடிக்கையாளர்களால் இவர்களுக்கு அணிவிக்கப்பட்ட மாலைகளே இந்த மூத்த உத்தி யோகத்தர்களின் வங்கிச் செயற்பாடுகளுக்குச் சான்றாகும்.

இவர்களின் ஆக்கமும், ஊக்கமும் எமக்குப் பக்க பலமாக இருந்த காரணத்தால் தான் சங்கானை மக்கள் வங்கி அகில இலங்கை ரீதியிலே பணவைப்பில் முதலாவது இடத்துக்கான விருதைப் பெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (48)

# பொங்குதமிழ் எழுச்சிப் பிரசாரத்தில் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் !

யாழ்ப்பாணம் —

தமிழீழ தேசிய அரசை சர்வதேசம் அங்கீகரிக்கக்கோரி - வவுனியாவில் செய்யப்பட்ட பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் பிரகடனத்துக்கு குடாநாட்டு மக்களை அணிதிரளச் செய்யும் நோக்கில் - யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவர்கள் நேற்று முன்தினம் முதல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் தியாகி திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் இருந்து தமது பிரசார நடவடிக்கையைத் தொடங்கினர்.

பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரிய மாணவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் சுதந்திரமாக வாழவேண்டும். எமது தாயகப் பிரதேசத்தில் குடிகொண்டுள்ள இராணுவத்தினர் எமது வாழ்விடங்களை விட்டு அகலவேண்டும். அப்பொழுது தான் மக்கள் சுதந்திரமாக வாழ முடியும். எமது கோரிக்கையை சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும். இதற்காக எமது கரங்களைப் பலப்படுத்துவதற்காகப் பல லட்சம் மக்கள் ஒன்றுதிரள வேண்டும். அதன் மூலம் பொது மக்களின் சுயவிருப்பை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சிப்பிரகடன நிகழ்வில் இலட்சக்கணக்கான மக்களை அணிதிரளச்செய்யும் நோக்குடன் ஆசிரிய மாணவர்கள் ஒவ்வொரு கிராமம் கிராமமாக வந்து பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதன்மூலம் மக்களை எழுச்சி கொள்ளச் செய்யலாம்.

மக்கள் எழுச்சியடைவார்களாயின் பொங்குதமிழ் பிரகடன நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்களின் தொகை அதிகரிக்கும் எனத் தெரிவித்தனர்.

# சாட்டி சிந்தாத்திரை மாதா திருவிழா

யாழ்ப்பாணம் —

சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை தேவாலய திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் நவநாள் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும், மறுநாள் சனிக்கிழமை காலை 6 மணிக்கு முதற் திருப்பலியும், காலை 8 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து திருச்சொருப பவனியும், ஆசீரும் இடம்பெறும்.

இந்தத் திருநாளை முன்னிட்டு பக்தர்களின் வசதிகருதி யாழ். பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து பிரயாணத்துக்கான விசேட பஸ் சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.




திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்று ஆரம்பமான விவசாய கண்காட்சியை பாடசாலை மாணவர்கள் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம்

# கடற்புலி மாவீரர்கள் நினைவாக முல்லையில் விளையாட்டுப் போட்டி

முல்லைத்தீவு—

தமிழீழ கடற்புலிகளின் துணைத் தளபதிகளான லெப்டினன்ட் கேணல் நிரோஜன், லெப்டினன்ட் கேணல் இரும்பொறை, மகளிர் சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் நளாயினி ஆகியோருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக விளையாட்டு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் முல்லைத் தீவில் நடைபெற்றது.

முல்லைத்தீவு பிரதேசத்தில் மாவீரர் நிரோஜன் பயிற்சிக் கல்லூரி மைதானத்தில் மூன்று நாட்கள் நடைபெற்ற போட்டிகளின், இறுதி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது.

நிரோஜன் பயிற்சிக் கல்லூரி போராளி பரநிதா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - வரவேற்புரையை நிரோஜன் பயிற்சிக் கல்லூரி போராளி தூயவன் நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவன் மற்றும் தளபதிகள், மாவட்டப் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். தொடர்ந்து நிரோஜன் பயிற்சிக் கல்லூரி போராளி எழிலினி உரை நிகழ்த்தினார். சிறப்புரையை தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பொதி பரிமாற்றமும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், மென்பந்து துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் எனப் பல போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்ற போராளிகளுக்கான பரிசில்களை தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை வழங்கினார். தளிர் இல்லச் சிறார்களின் கலை நிகழ்வுகள், கடற்புலிகள் படையணியின் கலை நிகழ்வுகள், துணைப்படை வீரர்களின் நாட்டிய நாடகம் என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், பெருந்தொகையான போராளிகள், துணைப் படை வீரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிராக ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு மனு!

மன்னார்—

இந்திய அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் சேது சமுத்திரத் திட்டத்தை ஆட்சேபித்து, இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் கோரிக்கை மனுக்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

தேசிய கடற்தொழிலாளர் ஒன்றிணைந்த அமைப்பு இதற்கான தெளிவாக்கல் நிகழ்வை நேற்று மன்னாரில் ஆரம்பித்தது. இதன் கீழ் மன்னாரில் சுமார் 50 ஆயிரம் கையொப்பங்கள் சேகரிக்கப்படவுள்ளதாக கடற்தொழிலாளர்களுக்கான உலக அமைப்பின் பொதுச் செயலர் ஹேமந்த் குமார தெரிவித்தார். ஐம்பதாயிரம் கையொப்பங்கள் அடங்கிய மனுக்கள் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரிடம் கையளிக்கப்படவுள்ளன. ஏற்கனவே சர்வதேச கடற்துறை வல்லுநர்கள் - சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிராக கொழும்பில் கடந்த மே மாதம் எதிர்ப்பு ஒன்றுகூடல் ஒன்றை நடத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(01)

# பொலிஸாரால் வல்லுறவுக்குள்ளான மன்னார் பெண்ணைக் காணவில்லை

மன்னார்—

2001 ஆம் ஆண்டு மார்ச் மாதப் பகுதியில் மன்னாரில் வைத்து பொலிஸாரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண்களில் ஒருவர் காணாமல் போயிருப்பதாக மனித உரிமை ஆணைக் குழுவின் சட்டத்தரணி எம். றெமீடியஸ் தெரிவித்தார்.

இது தொடர்பான வழக்கு அநுராதபுரம் மேல்நீதிமன்றில் இடம்பெற்றது. வழக்குவிசாரணையின் முக்கிய சாட்சியான பெண்ணொருவர் தொடர்ச்சியான கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுவருகின்றார்.

குறித்த காலப்பகுதியில் மன்னார் பிரதேசத்தில் வைத்து ஏகாம்பரம் விழிகலா, சின்னத்தம்பி சிவமணி ஆகிய குடும்பப் பெண்களை பாலியல்வல்லுறவுக்குள்ளாக்கியமை தொடர்பாக மன்னார் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த 12 பொலிஸாருக்கு எதிராக அநுராதபுரம் மேல் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் மீதான விசாரணை இன்று ஆரம்பமாகவுள்ளநிலையில்- பாதிக்கப்பட்ட பெண்களுள் ஒருவரும், முக்கிய சாட்சிகளில் ஒருவருமான ஏகாம்பரம் விழிகலா மர்மமான முறையில் காணாமற் போயுள்ளார் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மாணவர்கள் கௌரவிப்பு

துணுக்காய்—

துணுக்காய் வலயக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் சமூகக் கல்வி பாடக் கண்காட்சியும், சமூகக்கல்வி சம்பந்தமான அறிவுத்திறன்போட்டியிலும் வெற்றிபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 8 மாணவர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தால் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாங்குளம் மகாவித்தியாலய பாடசாலை மண்டபத்தில், துணுக்காய் கல்வி வலய சமூகக்கல்விப் பாட ஆசிரிய ஆலோசகர் பு.தயாநிதி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யுனிசெப் நிறுவன நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் திருமதி. சி.கௌரிபாலன், வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. ஜே.குரூஸ் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

## திலீபன் மருத்துவ சேவை; மூன்றாம் ஆண்டு நிறைவு!

மாங்குளம்—

மாங்குளம் தியாகதீபம் திலீபன் மருத்துவசேவையின் மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா - நேற்று மாங்குளம் திலீபன் மருத்துவசேவை நிலையத்தில் இடம் பெற்றது.

திலீபன் மருத்துவசேவை அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில் சிறப்புரைகள், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### செப்ரெம்பர்-21

1877: கனடா பிரதமர் அலெக்ஸாண்டர் மெக்கென்ஸி ஒட்டாவாவில் அமைந்திருந்த தனது அலுவல்த்துக்கும், ஆளுநர் மாளிகைக்கும் இடையே தொலைத்தொடர்பு இணைப்பைப் பொருத்திக் கொண்டார். தொலைத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட முதலாவது பிரதமர் இவரேயாவார்.

1915: பிரிட்டனது விமானப் படையில் - சண்டை விமானப் படையணி என்று தனிப்பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

1934: ஜப்பான் நாட்டில் ஒஸாகா நகரில் அடித்த கடுமையான புயலில் நான்காயிரத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர்.

1944: அமெரிக்க விமானங்கள் பிலிப்பைன்ஸ் மீது குண்டு வீசித் தாக்குதலை ஆரம்பித்தன.

1964: பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து மோல்டா விடுதலை பெற்றது.

1974: கடந்த வருடம் நவம்பர் 3 ஆம் திகதி அனுப்பப்பட்ட மரைனர் - 10 என்ற விண்கலம், இரண்டாவது முறையாக செவ்வாய்க்கிரகத்துக்கு மிக அருகில் 300 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று, முதன் முறையாக அதன் பரப்பை ஒளிப்படங்கள் எடுத்து அனுப்பி வைத்தது. இதன் பரப்பும் சந்திரனின் பரப்பைப் போல் குன்றும், குழியுமாகவே இருப்பது கண்டறியப்பட்டது. 1280 கிலோ மீற்றர் குறுக்களவுள்ள ஒரு பெரிய குழி கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கு 'கலோரிஸ்' என்று பெயர் சூட்டப்பட்டது.

1977: பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா உட்பட பதினேழு நாடுகள் அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

1988: அஸர்பைஜானில் ஆர்மீனியர்கள் பெரும்பான்மையாக வாழும் தன்னாட்சி உரிமை கொண்ட பகுதியான நகர்னோகரபாக்கில் அவசரகால நிலை பிரகடனம்.

1993: இலங்கையில் தமிழர் மீதான சிங்களவர்களது திட்டமிட்ட இனக் கலவரம் பற்றி 'எமர்ஜென்சி - 58' என்ற புத்தகத்தை எழுதியதன் மூலம், உலக அளவில் புகழ் பெற்ற பத்திரிகையாளர் தார்சி வித்தாச்சி லண்டனில் மரணமடைந்தார்.

1994: இந்தியாவின் சூரத் நகரில் ப்ளேக் நோயின் தாக்கத்தால் ஏறக்குறைய ஏழு லட்சம் மக்கள் அந்த நகரை விட்டு அகலத் தொடங்கினர்.

✷ : ஆரம்ப கட்ட சமாதானப் பேச்சுக்கு அரசுப் பிரதிநிதிகளை நியமித்து, தலைவர் வே.பிரபாகரனுக்கு-பிரதமர் சந்திரிகா கடிதம் அனுப்பி வைத்தார்.

✷ : யாழ். கொழும்புத்துறையில் இடி மின்னல் தாக்கி மூன்று பேர் இறந்தனர்.

தொகுப்பு - சந்துரு

# பூநகரி - மட்டுவில்நாடு பிரதேசத்தின் அபிவிருத்திக்கான செயற்திட்ட நிகழ்வு




பூநகரி—

பூநகரிப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் கிராம அபிவிருத்திக்கான செயற்திட்ட அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஆசிய அபிவிருத்திவங்கியின் நிதிப் பங்களிப்புடன் தமிழர்புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் - போரால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்துக்கமைவாக பூநகரி-மட்டுவில் நாடு பகுதியில், கிராம அலுவலர் சீலமணி தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது

இந்த நிகழ்வில் மங்கள விளக்கேற்றப்பட்டதையடுத்து, தேசியக் கொடி ஏற்றப்பட்டது. இதனையடுத்து செயற்திட்டத்தின் பெயர்ப் பலகையை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் பூங்குன்றன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

போர்ச் சூழல்களிலும், சமூகப் பொருளாதார ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டதன் காரணமாக இந்தக் கிராம அபிவிருத்திக்கான செயற்திட்ட அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், தமிழர் புனர் வாழ்வுக் கழக வடக்கு - கிழக்கு சமுதாய, மீள் கட்டமைப்புத் திட்ட இணைப்பாளர் சுடர், தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் கெங்காதரன் மற்றும் சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

நமது ஈழநாடு

வைர வரிகள்

தலைமை என்பது இலட்சியங்களுடன் இருப்பது. வழமான காலத்தில் மட்டுமல்ல, வறுமையில் வாடும்போதும்கூட

-ரேக்ராக்-



எமது எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப்போல்தான் நாளைய எமது எதிர்காலச் சந்ததியும் துன்பப்படும், வருத்தப்படும்.

*- தியாக தீபம் லெப்.கேணல் திலீபன்-*

## நமது நோக்கு

### விடிவைத்தராத தேர்தல்!

இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் திருவிழாவை - தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதிதான் இந்தத் திருவிழாவின் இறுதி நாளாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அன்று ஒரு வேட்பாளர் மட்டும் கொடியேற்ற ஏனையோர் கொடியை இறக்கிக்கொண்டு செல்லவேண்டியதுதான்.

இப்போதைக்கு இந்தத் தேர்தல் திருவிழாவில் நான்கு வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளமை உறுதியாகியுள்ளது. இதில் பிரதான வேட்பாளர்களில் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பெயர் அறிவிக்கப்பட்டு ஜே.வி.பி, ஹெல உறுமயவின் பக்க பலத்துடன் களமிறங்கியுள்ள மகிந்த ராஜபக்ஷ ஒருவர்.

மற்றவர், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் களமிறங்கி - சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவை நாடிநிற்கும் ரணில் விக்கிரமசிங்க.

இவர்களை விட ஏழு முஸ்லிம் அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளராக கபீப் நசீர் அகமட்டும், சோசலிச சமத்துவக் கட்சி சார்பில் விஜே டயசும் இந்தத் தேர்தலில் போட்டியிடப் போவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பலர் இந்தத் தேர்தலில் குதிக்கக்கூடும்.

இந்தத் தேர்தல் திருவிழா சமாதானமா? யுத்தமா? என்பதைத் தீர்மானிக்கும் களம் என்கிறார் ரணில்.

ஆனால், பிரதமர் மகிந்தவோ ஒற்றையாட்சிக்குள்தான் எந்தத் தீர்வும் என்று சொல்லிக்கொண்டு பேரினவாதக் கூட்டணி அமைத்திருக்கிறார்.

இந்தத் தேர்தலில் நிச்சயமாகத் தமிழ், முஸ்லிம் வாக்காளர்கள் மிகவும் தீர்க்கமானதொரு சக்தியாக இருப்பதால் அவர்களைக் கவர இருபெரும் சிங்களக் கட்சிகளும் முயன்று வருகின்றன.

பேரினவாதிகளுடன் கூட்டணி அமைத்துக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் வெறுப்புக்குள்ளாகியிருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த- ரணில் முயன்றுகொண்டிருக்கிறார். ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த ஜனாதிபதித் தேர்தல் எந்தவொரு நன்மையையும் பெற்றுக்கொடுக்கப் போவதில்லை என்பதுதான் உண்மை.

தென்னிலங்கையில் இருபெரும் சிங்களக் கட்சிகளுமே- தமிழ் மக்களுக்கு நீதியான, நியாயமான அரசியல் தீர்வொன்றை வழங்கும் எண்ணத்தில் இப்போதும் இருக்கவில்லை, இனி எப்போதும் இருக்கப்போவதும் இல்லை.

இதனை கடந்த மூன்றரை ஆண்டுகால போர் நிறுத்த காலத்தைக் கொண்டே ஒரு மதிப்பீட்டைச் செய்ய முடியும்.

2002 ஆம் ஆண்டு போர் நிறுத்தத்தை ஏற்படுத்திய ரணில் அரசாங்கம் - பேச்சுக்களை ஒரு கட்டத்துக்குமேல் நகர்த்தாமல் காலங்கடத்தியது. பின்னர் சர்வதேச நிர்ப்பந்தத்தினால் இடைக்கால நிர்வாகம் தொடர்பான முயற்சிகளில் இறங்க - ஜனாதிபதி சந்திரிகா ஆட்சியைக் கலைத்தார்.

பின்னர் சந்திரிகா அரசு புலிகளுடன் பேச்சுக்களை நடத்தாமல், நிழல் யுத்தத்தைத் தீவிரமாக நடத்தி வருகிறது. இப்படிப்பட்ட நிலையில் மகிந்த ராஜபக்ஷவும் - சிங்களப் பேரினவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து தமிழருக்கெதிரான நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இப்படியாக, ரணிலும் சரி, சந்திரிகாவும் சரி, மகிந்தவும் சரி, கடந்த மூன்றரையாண்டுகால போர் நிறுத்த சூழலை சரியாகப் பயன்படுத்திக்கொண்டு - தீர்வு முயற்சிகளில் ஈடுபடவில்லை.

அப்படி சமாதானத் தீர்வில் நம்பிக்கைவைத்து இவர்கள் செயற்பட்டிருந்தால் இன்றைய போர் நெருக்கடி நிலை தோன்றியிருக்காது.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் சிங்களத் தலைமைகள் தமிழரை ஏய்த்த வரலாறு ஒருபுறம் இருக்க - கடந்த மூன்றரை ஆண்டுகால போர் நிறுத்த காலத்தைக் கூட இவர்கள் தமிழரைப் படுகுழிக்குள் தள்ளிவிழுத்தவே பயன்படுத்தினர்.

இந்த மூன்றரை ஆண்டுகால சந்தர்ப்பத்தைத் தவறவிட்ட சிங்களத் தலைமைகளா இனியொரு தீர்வைத் தமிழருக்குப் பெற்றுக்கொடுக்கப் போகிறது?


சிங்களத் தலைமைகள் தமது காரியம் நிறைவேறும் வரை சிறுபான்மை மக்களை அரவணைப்பதும் பின்னர் கைகழுவிடுவதும் புதிதான ஒரு வரலாறு அல்ல. ஆனால், இனிமேலும் தமிழ் மக்கள் சிங்களத் தலைமைகளின் 'பொறிக்குள்' விழும் நிலையில் இல்லை.

மகிந்தவாகட்டும், ரணிலாகட்டும் அவர்கள் தமிழ் இனத்தைப் பூண்டோடு அழிக்கும் பேரினவாத சிந்தனையில் இருந்து விடுபடப்போவதில்லை. அப்படிப்பட்ட நிலையில் - அடுத்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக எவர் பதவியேற்றாலும் தமிழ் மக்களுக்கு விடிவையோ விமோசனத்தையோ தராது.

அந்த விடிவையும் விமோசனத்தையும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமே பெற்றுத்தரும் .

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# புலிகள் வெளிநாடு செல்வதைத்தடுப்பது; 'சீப்பை' ஒளித்துவைத்த கதை போலாகும்!

சீப்பை ஒளித்து வைத்தால் கலியாணம் நின்று விடும் என்று ஒருத்தி சீப்பை எடுத்து ஒளித்து வைத்தாளாம். இப்படி ஒரு பழமொழி சொல்லப்படுவதுண்டு. சிறிலங்கா அரசின் செயலும் இப்படித்தான் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு வந்தார் நண்பர் பரமசிவம்.

என்ன கலியாணக் கதையுடன் வருகிறீர். என்ன விஷயம் என்று கேட்டேன்.

இது கலியாணக் கதையில்லை. எங்கடை சந்திரிகா அரசாங்கத்திலுள்ளவர்கள் இப்ப புதுசா இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக உலக நாடுகளுக்கு விடுதலைப் புலிகள் எதையும் எடுத்துச் சொல்லாமல் இருப்பதற்கு வழி கண்டு பிடித்திருக்கிறார்களாம். இது பற்றிச் சொல்வதற்குத்தான் சீப்பை ஒளித்து வைத்தால் கலியாணம் நின்று விடுமென்று நினைத்ததுபோல என்று அந்தப் பழமொழியைச் சொன்னேன் என்றார் பரமசிவம்.

எதுக்காக இந்தப் பழமொழி இங்கே வந்தது? இருதரப்புக்கிடையிலும் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கான அறிகுறிகளையும் காணோமே என்றேன்.

இதனால் தான் நான் இதைச்சொன்னேன். இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்காக, நோர்வேயின் அனுசரணையுடன் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் பேச்சு நடந்தது. இந்தப் பேச்சுகளில் இனப்பிரச்சினைக்கு இரு தரப்பும் சமாதான உடன்பாட்டுக்கு வருவதற்கு முன்னர் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு தமிழர் தாயகத்தில் ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பு அவசியமென்று விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். இதை அன்றைய ரணில் அரசு ஏற்றுக்கொண்டு இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை உருவாக்கியது. இது இயல்பு வாழ்க்கைக்கு வழி வகுக்காது என்று தெரிவித்த விடுதலைப் புலிகள், இடைக்கால நிர்வாக அமைப்பை இதில் அனுபவப்பட்ட வெளிநாடுகளுடனும் கலந்தாலோசனை செய்து உருவாக்குவதற்கு முன்வந்தனர். இதனால் விடுதலைப் புலிகளின் ஒரு குழுவினர், பல நாடுகளுக்கும் சென்று பல நாடுகளினதும் சட்டவல்லுநர்கள், அரசியல் தலைவர்கள், அரசியலமைப்பு வல்லுநர்கள் என்று பலரையும் சந்தித்துக் கலந்தாலோசனை செய்தனர். இதன் பின் நாடு திரும்பிய விடுதலைப் புலிகளின் குழுவினர் தலைமைப் பீடத்துடன் கலந்துரையாடி இடைக்காலத் தன்னாதிக்க அதிகாரசபையொன்றின் அமைப்புத் திட்டத்தையும் அரசிடம் கையளித்தனர். இந்தத் திட்டம் வெளிவந்ததுமே இங்குள்ளவர்கள் மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள சிலரும் கூட இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபை என்ற பெயரில் நாட்டைப் பிரித்துத் தமிழீழம் அமைக்கப் பார்க்கிறார்கள், கேட்கிறார்கள் என்று துள்ளிக் குதித்தனர். சந்திரிகா அம்மையாரும் இதைக் கடுமையாக எதிர்த்தார். என்றாலும் இந்த தன்னாதிக்க அதிகார சபைத் திட்டத்தை அடிப்படையாக வைத்துப் பேச்சு நடத்தலாம் என்று அரைகுறை மனத்தோடு யு.என்.பி அரசின் அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார். ஆனாலும் இது பிரச்சினைக்குத் தீர்வு காண வழிவகுத்தால், தமது அரசியலுக்கு ஆபத்தாகிவிடுமென அஞ்சிய சந்திரிகா அம்மையார், ரணிலின் அரசில் கைவைத்துப் பின்னர் ஆட்சியையே கலைத்தார். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையும் அப்படியே நிற்கிறது என்றார் பரமசிவம்.

இப்போ ரணிலும், புலிகளும் செய்து கொண்ட போர் நிறுத்த உடன்படிக்கையே ஈடாட்டம் காணும் நிலைக்கு வந்து நிற்கிறதே என்றேன்.

போர் நிறுத்த உடன்படிக்கைக்கு ஆபத்து வந்துவிடும் என்று தோன்றியதால் அது பற்றி இருதரப்பும் பேசலாமென்றும், பேச வேண்டியது அவசியமென்றும் இருதரப்பும் ஒப்புக்கொண்டன. போர் நிறுத்த உடன்பாடு குலைந்து விடக்கூடாது என்பதில் ஆதிக்க சக்திகள் மிகக்கவனமாக இருக்கின்றன. இந்தப் பேச்சு வார்த்தையை எங்கே நடத்துவது என்ற பேச்சு எழுந்தது. இலங்கையில் நடத்த வேண்டுமென்று அரசாங்கம் சொன்னது. இலங்கையில் நடத்துவதானால் கிளிநொச்சியில் நடத்தலாமென்று விடுதலைப்புலிகள் கூறினார்கள். இதற்கு அரசு சம்மதிக்கவில்லை. கிளிநொச்சியில் நடத்தாவிட்டால் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடத்தலாமென்று யோசனை கூறப்பட்டது. இது உள்நாட்டுப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாகையால், உள்நாட்டிலேயே நடத்த வேண்டுமென்று இலங்கை அரசு பிடிவாதமாகச் சொன்னது. இதனால் கிளிநொச்சிக்கும் - ஒஸ்லோவுக்கும் பொதுவாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பேச்சை நடத்தலாமென்று நோர்வே யோசனை சொன்னது.

இதற்குப் புலிகள் மறுத்துவிட்டார்கள். பேச்சு வார்த்தை இயல்பாக எந்த இடையூறுமின்றி நடக்க வேண்டும். இலங்கையிலுள்ள சூழ்நிலை கொழும்பிலோ, கட்டுநாயக்காவிலோ பேச்சு நடத்தக் கூடியதாக இல்லையென்று புலிகள் தெரிவித்து விட்டனர். வெளிநாடுகளில் பேச்சு நடத்தினால் விடு தலைப்புலிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமி ழீழப் பிரசாரத்தை நடத்தி விடுவார்களாம். இதனால் தான் வெளிநாடுகளில் பேச்சு நடத்துவதை அரசு ஏற்கவில்லையாம். கொழும்பு ஊடகங்கள் சில வெளிநாடுகளில் பேச்சு நடத்துவதற்குச் சம்மதிக்கக் கூடாதென்றும், பிரசாரத்துக்கு இதைப் புலிகள் பயன்படுத்துகிறார்களென்றும் தெரிவித்தது மட்டுமன்றி அரசாங்கம் சொல்லுமிடத்துக்குத்தான் புலிகள் வந்து பேசவேண்டும் என்றும் அடித்துச்சொல்லியது. இதே பிடியை இப்பொழுது அரசாங்கமும் பிடித்து நிற்கிறதாம் என்று பரமசிவம் சொன்னார்.

அதாவது வெளிநாடுகளில் பேச்சு நடத்துவதனால் புலிகள் வெளிநாடு போய் இனப்பிரச்சினை பற்றி தமது பிரசாரத்துக்குப் பயன்படுத்தி விடுவார்கள் என்று அரசாங்கம் பயப்படுகிறதாக்கும் என்றேன்.

இப்படித்தான் முன்பு இனப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுவிவகாரம் என்று மூடி மறைத்தார்கள். இங்கு இனப்படுகொலைகள் நடந்த போது பயங்கரவாதப் புலிகளைக் கொன்று விட்டோம் என்று பிரசாரம் செய்தார்கள். பின்னர் விடுதலைப் புலிகளால் உலகத்துக்கு உண்மை தெரியவந்தது. போர் நிறுத்தம் செய்தும் உண்மையை உலகுக்கு எடுத்துச் சொன்னதும் புலிகளே. இப்பொழுது உலகம் நன்குணர்ந்துவிட்டது. ஐரோப்பிய யூனியன் நாடுகளிடம் புலிகளைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். "ஆகட்டும் பார்க்கலாம்" என்று காமராஜர் பாணி யில் ஐரோப்பிய யூனியன் பதில் சொல்லிவிட்டது. இனி இந்தப் பயங்கரவாதப் பாச்சா உலகில் பலிக்காது. சுப்பிரமணியம் சுவாமி இன்று பக்கம் பக்கமாகக் கட் டுரை எழுதி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளில் புலிகளைப்பற்றி என்னதான் திட்டினாலும் உலகம் உண்மையை உணர்ந்து விட்டது. இதனால்தான் வெளிநாடு களுக்குப் போகாமல் தடுப்பதால், சீப்பை ஒளித்துக் கலியாணத்தை நிறுத்திய கதையாகத்தானிருக்கும் என்று சொன்னேன் எனச் சொல்லியபடி பரமசிவம் நடந்தார்.

# தமிழீழத் தனியரசை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும்

## இதற்கு ஈழத்தமிழ் மக்களால் முன்வைக்கப்படும் காரணங்கள்

தமிழ் இனம் தனது தாயகப் பிரதேசத்தில் தனக்கே உரிய மொழி, கலாசாரத்துடன் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் நாகரிகமாக வாழ்ந்துவருகிறது.

தமிழ் இனத்தின் சுயாதீன செயற்பாடுகளை பெரும்பான்மை சிங்கள இனம் அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் கட்டுப்படுத்துகிறது. இதனை ஜனநாயகம் என்று கூறமுடியாது. இதனை எதிர்கொள்ள சுயாதீன அரசு அமைதல் அவசியம்.

கூட்டான சித்திரவதைகள், படுகொலைகள், ஆக்கிரமிப்பு எனத் திட்டமிட்ட இனப்படுகொலைகள் இலங்கை ஜனநாயக சாசனத்தில் நடைபெறுகின்றது. இதனை உடைப்பதற்கு புதிய அரசியல் கட்டமைப்பு அவசியம்.

சிங்கள மேலாதிக்க எண்ணமும் தமிழரை இரண்டாம் தரப் பிரஜைகளாக நோக்கும் எண்ணமும் சிங்கள மக்களிடம் உள்ளது. (INGALA GRANDIDOSE DELUSION) இதனை அவர்களிடமிருந்து அகற்றமுடியாது. இதனை ஆழிப்பேரலை அனர்த்த புனர்வாழ்விலேயே காணலாம். இதற்கு ஒரேயொரு மருந்து பிரிந்து வாழுதலே. அன்று தமிழரசுக் கட்சியினர் சுட்ட மண்ணும், பச்சை மண்ணும் ஒட்டாது என்றனர். இன்று நாம் இன மேலாதிக்க மனநோய் உள்ள சமூகத்துடன் ஒன்றாக வாழமுடியாது என்கிறோம்.

சமாதானச் சூழலில் பிரிந்து வாழ்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்புத் தேவை. அன்றேல் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சர்வதேசத்தின் பார்வைக்குத் தெரியாமல் அழிக்கப்பட்டதுபோல், தொடர்ந்தும் எமது இனம் அழிக்கப்படும். ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று, பல்லாயிரக்கணக்கான மக்கள் உடல் உள ஊனமாகியும், மனித உரிமை மீறல்களைச் செய்த இலங்கை இராணுவத்தினர் ஐ.நா. சமாதானப் படைக்கு அணிகலன்களாகியமை எமது மக்களின் கவலைக்கும், கண்டனத்துக்கும் உரியது.

மேலும் சர்வதேசம் சுதந்திர தேசமாக அங்கீகரித்தாலேயே சிங்கள தேசம் சம அந்தஸ்தை தமிழருக்கு வழங்க நிர்ப்பந்திக்கலாம். அன்றேல் அடக்குமுறைக்குள் தொடர்ச்சியாக வாழவேண்டி ஏற்படும்.

இலங்கை இன்று இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் என ஆறுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து இராணுவ உதவிகளைப் பெற்று, பல்வேறு வண்ணங்களால் சித்திரம் வரைவது போல், தமிழின அழிவோவியத்தை வரைகிறது. தொடர்ந்தும் இந்தச் சமூக வன்முறைகளையும், மனிதநேயமற்ற செயற்பாடுகளையும் தமிழ்மக்கள் பொறுத்துக்கொண்டு இருக்கமாட்டார்கள். இதன் பிரதி பலன்களை சம்பந்தப்பட்டவர்கள் அனுபவிக்கவேண்டிவரும்.

நாகரீகமடைந்த உலகில் தகவல் தொழில்நுட்பம் மிகுந்த உலகில் இலங்கையின் தமிழர் அரச இயந்திரத்தால் அடக்கப்பட்டுள்ளனர். எமது உரிமைக் குரலை அரசு பயங்கரவாதம் எனப் பிரசாரம் செய்கிறது. இதனை மக்கள் குரலாக எழுப்புகிறோம்.

தமிழினம் இராணுவ ஆக்கிரமிப்பு யுத்தத்தாலும், இன அழிப்பு நடவடிக்கையாலும், திட்டமிட்ட இன ஒடுக்கல்களாலும் முன்னேற முடியாதுள்ளது. இதனை அகற்ற சுயமான ஆளுகை அவசியம்.


இன்று மனிதநேயப் பணிகளை சர்வதேச நிறுவனங்களே வடக்கு - கிழக்கில் செய்கின்றன. ஆனால் சர்வதேச நிறுவனங்களுக்கே தெரியும் தமது செலவில் 5% மட்டுமே பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடையும். ஏனையவை சர்வதேச நிறுவன உத்தியோகத்தர்களின் போக்குவரத்துக்கும், இதர செலவுகளுக்கும்.

எனவே, தமிழ்மக்களுக்கு முழுமையான மனிதநேயப் பணிகளை சுயமான அரசாலேயே ஆற்றமுடியும். மேலும் சர்வதேச ஊடுருவல்களையும் தடுக்கமுடியும்.

தமிழீழம் சர்வதேசத்தை அங்கீகரித்துவிட்டது. சர்வதேசம் தமிழீழத்தை அங்கீகரிக்க எவ்வளவு காலம் காத்திருப்பது? அதனை தீர்மானிப்பது யார்? பொங்கு தமிழே தமிழினமே நீ பதில்கூறு.

சி.யமுனானந்தா

# உயிர்காக்கும் உத்தமர்கள்



பல சந்தர்ப்பங்களில் பயன்கருதாது உதவி செய்பவர்கள், அத்திவார கற்களைப் போல் மற்றவர்களின் கண்களுக்கும், கருத்துகளுக்கும் அகப்படுவதில்லை. அத்தகைய தன்மையிலேயே குருதிக் கொடையாளர்களும் அடங்குவர். யார் எவர்க்கென்று இன்றி மனித உயிர் எதற்கும் தமது இரத்தத்தால் உதவி செய்பவர்கள், உயிர் காப்பவர்கள் இவர்களே. பல நோயாளிகளுக்கு இவர்களே உண்மைக்கான 'இரத்த உறவுகளாக' இருந்திருக்கின்றார்கள், இருந்து வருகின்றார்கள்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் நோயாளிகளுக்கு இரத்தம் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படும். இத்தகைய சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைகளில் இயங்கும் இரத்த வங்கிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமான மூலாதாரமான இடத்தைப் பெறுகின்றது. இதேவேளையில் இரத்த வங்கியின் செயற்பாட்டுக்கு குருதிக் கொடையாளர்களே தூண்களாக அமைகின்றனர். குருதிக்கொடையாளர்கள் இன்றி குருதி மாற்றீடு சாத்தியமில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்வதில்லை. வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் இயந்திரசாதனங்களை வைத்தோ கடைகளில் வாங்கும் பொருட்களை வைத்தோ, இரத்த வங்கி இயங்கிவிட முடியாது. இரத்தமே அதன் இயக்கத்துக்கு தேவை. அதிலும் இரத்தத்தின் தொடர்ச்சியான போதிய கையிருப்பு என்பது இரத்த வங்கியின் செயற்பாட்டுக்கு அத்திவாரம் ஆகும்.

இதனூடாக மனித உணர்வுடன் பொதுநோக்காக தவணை முறைகளில் தொடர்ச்சியாக இரத்தானம் செய்து வருபவர்களின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளமுடியும். இவர்களின் மனித உணர்வுடன் கூடிய அக்கறையான செயற்பாட்டை இரத்த வங்கியினரே அறிந்திருப்பார்கள். நோயாளர்களுக்கோ நோயாளர்களின் உறவினர்களுக்கோ இதுவிடயமாக எதுவும் தெரியவருவதில்லை. அந்த வகையிலேயே இரத்த வங்கி சமூகம் (தேசிய குருதி மாற்றுசேவை) தன்னார்வ குருதி கொடையாளர்களை கௌரவிக்க முனைகின்றது. சமூகத்துக்கு இவர்களை அறியத் தருவது தமது கடமையென கருதுகின்றது. உண்மையில் குருதிக் கொடையாளர்களை கௌரவிப்பது சமூகத்தின் கடமையாகும். சமூகத்தின் பிரதிநிதியாக இரத்த வங்கி இவர்களுக்கு நன்றியறிதலை தெரிவிக்க முனைகிறது. இதை எமது கடமையாக கருதுகின்றோம்.

இந்த சந்தர்ப்பத்தில் சில கருத்துக்களை முன்வைக்க முனைகின்றோம். உண்மையில் இரத்த வங்கிக்கு இரத்த தேவை என்பது ஒரு பிரச்சனையாக இருக்கத் தேவையில்லை. இரத்த வங்கியின் இரத்த தேவையை கவனிக்கும் போது சமூகத்தின் மிகக் குறைவான விகிதத்தினர் இரத்ததானம் செய்ய முன்வந்தாலே போதுமானது. நோயாளர்கள் இரத்தமின்றி பரிதவிக்கவேண்டிய நிலை வராது. இரத்த தானம் செய்வது மிகவும் சுலபமான செயற்பாடாகும். மிகவும் குறுகிய நேரமே தேவைப்படும்.

இரத்ததானம் செய்வதால் எமது நாளாந்த தேவைகளில் எந்த மாற்றமும் தேவைப்படாது. சத்தான உணவு எடுக்கவேண்டும் என்றோ, சில நாட்களுக்கு ஓய்வு எடுக்க வேண்டுமென்றோ இல்லை. முன் அறிவித்தல் எதுவும் இன்றி இரத்த வங்கிக்கு கடமை நேரத்தில் வந்து இரத்ததானம் செய்யலாம். பலர் ஒன்றாக சேர்ந்து இரத்த தானம் செய்ய முன்வரும் போது நாம் அவர்களின் ஊர்களுக்கோ, வேலைத் தளங்களுக்கோ வந்து இரத்தத்தைப் பெற்றுக்கொள்வோம்.

ஆகவே மீண்டும் இத்தகைய உயரிய பணியை ஆற்றிவருபவர்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன், இந்த உன்னத பணியை ஆற்றுவதற்கு சமூக நோக்குக் கொண்ட அனைவரும் முன்வர வேண்டும் என்று அன்பான அழைப்பு விடுக்கின்றோம்.

# இளங்கலைஞர் மன்ற தெய்வீக இசையரங்கு கண்ணோட்டம்

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி இளங்கலைஞர் மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தெய்வீக இசையரங்கு - வழமை போன்று இந்த ஆண்டும் நல்லூர் துர்காதேவி மணிமண்டபத்தில் 27 நாட்கள் ஒரு மணிநேர நிகழ்வாக நடைபெற்று வந்தது. இளங்கலைஞர் மன்றம் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், இசை ஆர்வலர்களுக்கு ஒரு விருந்தாகவும் வருடா வருடம் நடத்திவரும் இசை நிகழ்வு மிகவும் பாராட்டத்தக்கது.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கச்சேரிகள் நடத்தப்பட்டு வந்தன. இதில் இணுவில் கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும், பி.ரஜீந்திரன் குழுவினரின் கெஞ்சிராக்கச்சேரியும் வெகு சிறப்பாக ரசிகர்களைக் கவர்ந்தவையாக அமைந்தன.

பொதுவாக இந்த நிகழ்வில் கலந்து கொண்ட இளங்கலைஞர்கள் தாம் கற்ற இசைக்கலையை மேடையில் அப்படியே பாடி, ஒப்படைத்தமை ரசிகர்களை அதிகம் கவரவில்லை. அவர்கள் தாம் பாடமாக்கி, பயின்ற இசையை மேடையில் ஏறி, மீட்டுப் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பமாகவே இதனைப் பயன்படுத்தினர். இந்த நிகழ்வில் பாடிய எஸ்.உமாரமணசர்மா, கே.ஜே.யேசுதாஸின் பாணியில் பாடல்களைப் பாடி, ரசிகர்களிடம் பாராட்டுப் பெற்றார் எனலாம். அவர் இன்னமும் இசை நுணுக்கங்களை கற்க வேண்டியுள்ளது.

செல்வி தாரணி ரஞ்சன் நல்ல குரல் வளம் உள்ளவர். அவராக ஆலாபனை நிரவல், சுரங்கள் என்பன கற்று எதிர்காலத்தில் சிறந்த கலைஞராக வரமுடியும்.

திருமதி. வாஸஸ்பதி ரஜீந்திரன் வழமை போன்று தனது தனித்துவமான திறமைகளைக் காட்டி, நித்தியஸ்ரீயின் பாணியில் பாடி, பாராட்டுதல்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. எஸ்.குமாரசாமி என்பவர் பலத்த குரலில் சீர்காழி கோவிந்தராஜனின் மெருகில் பாடினார். செல்வன் அருணந்தி ஆரூரன் என்னும் இளைஞர் மிகவும் சிறப்பாக, அனுபவமுடைய வித்துவான் போன்று பாடி, ரசிகர்களின் பலத்த கரகோஷத்தைப் பெற்றார். இவர் எதிர்காலத்தில் தரமான வித்துவானாகவர வாய்ப்புகள் நிறையவுள்ளன.

பொன் ஸ்ரீ வாமதேவன் அன்று தொட்டு, இன்று வரை நிலைத்து நிற்கும் தரமான பாடகராக உள்ளார். இவரது கச்சேரியையும் அதிக ரசிகர்கள் பார்த்து ரசித்தனர். பக்கவாத்தியங்களும் இவருக்கு அனுசரணையாக வாசிக்கப்பட்டு, இவரது கச்சேரியை சிறப்படைய செய்தனர். ஏ.கே.கருணாகரன் தரமான, சிறந்த முதன்மைக் கலைஞர். அவர் பாடினால் இந்திய பெரும் கலைஞரின் கச்சேரியைக் கேட்பது போன்று அமைந்துவிடுகிறது. கே.இராமநாதன் இன்னிசை நிகழ்வு மிகவும் களை கட்டியதாக அமைந்தது. அவரும் இந்திய பெரிய வித்துவான் பாடுவது போன்று - ராக ஆலாபனை, சுரம், நிரவல் என்பன செய்து கற்பனாசுரம் செய்து பாடி மகிழ்வித்தார். அவர் பாடிய பந்துவராளி ராக ஆலாபனை நிரவல் என்பன ரசிகர்களின் மிகுந்த பாராட்டுகளைப் பெற்றன. தரமான நிகழ்வுகளுக்கு ஒரு மணி நேரம் போதியதாக அமையவில்லை.

இளங்கலைஞர் மன்றத்தால் வழங்கப்பட்ட நிருத்தியாஞ்சலி என்னும் நடன நிகழ்வை பூங்காவனத் திருவிழாவன்று மண்டபம் நிறைந்த இசை ரசிகர்கள் ரசித்தமை சிறப்பாக அமைந்தது. எந்த நிகழ்வானாலும் தரம் மிக்கதாக, கவரக்கூடியனவாக அமைந்தால் அதை ரசிகர்கள், ஆர்வலர்கள் விரும்பிப் பார்ப்பதைக் காண முடியும். ஆனால், இந்தமுறை இங்கு நடைபெற்ற இசை நிழ்ச்சிகளுக்கு ரசிகர்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் பொன் சுந்தரலிங்கம் முதலான கலைஞர்கள் முன்னின்று நடத்திய இசைநிகழ்வுகளில் பல ஆயிரம் ரசிகர்கள் கலந்து சிறப்பித்தனர். எதிர்காலத்தில் இளங்கலைஞர்களை தரமானதாக்க இத்தகைய மன்றங்கள் முன்வரவேண்டும். இராமநாதன் நுண்கலை மன்றம் அதன் இசைத்துறைத் தலைவராகச் சிறந்த அனுபவம் மிக்க, தரமான ஒருவரை நியமித்து கலைஞர்களை ஊக்குவிக்க முன்வந்தால் எதிர்காலத்தில் எம் இசைக்கலைஞர்கள் தரமான சிறந்த கலைஞர்களாக வரமுடியும்.

இ.கு.சர்மா

# சமாதானத்தின் பெறுமதியும், அவசியமும்

இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் சமாதானத்தின் பெறுமதியையும், அவசியத்தையும் பற்றி மக்களுக்கு விளக்கவேண்டிய தேவை இல்லை. 25 வருடகால யுத்தமும், அதற்கு வழிவகுத்த முன்னைய 25 வருடகால உரிமைமறுப்பும் எம்மீது சுமத்தியுள்ள வேதனையின் பாரத்தை அனைவரும் அனுபவித்துள்ளோம். குறிப்பாக எமது பகுதியைப்போன்று யுத்த பிரதேசங்களில் வாழும் மக்கள் இன்னும்தான் அமைதி குலைந்தவர்களாய், மீண்டும் போர் மேகங்கள் சூழ்ந்த நிலையில் நிச்சயமற்ற ஒரு எதிர்காலத்துக்கு முகம்கொடுத்து ஏக்கத்துடன் வாழ்கின்றனர்.

இவ்வாறு யதார்த்த ரீதியில் நோக்கும்போது, சமாதானம் என்றவுடனேயே அதை யுத்தத்துடன் தொடர்புபடுத்தியே பார்க்கிறோம். இது முறையானதே.

இருப்பினும் யுத்த சூழ்நிலைக்கு அப்பாலும் சமாதான சமிக்ஞையை நாம் காணுகிறோம். தனி நபர்களிடையே, குடும்பங்களுக்கிடையே, குழுக்களுக்கிடையே, சமூகங்களுக்கிடையே தகராறுகள் வன்செயல்கள் ஆகியவற்றைக் காண்கிறோம்.


இவை வெளிப்படையாகத் தோன்றுபவை. சமாதானத்துக்கும் அச்சுறுத்தலாயிருப்பது யுத்தமும், வன்செயல்களும் மட்டுமல்ல. நீர்மட்டத்துக்கு கீழே மறைந்திருக்கும் பனிமலையில் பெரும்பகுதிபோன்று, எமது பார்வையிலிருந்து தப்பும் அநீத சமூகக் கட்டமைப்புகள் இனம், நிறம் , மொழி , மதம் , பால், நிலை, சாதி, பிரதேசம் போன்ற பலவிதமான அடித்தளங்களின்மீது செயற்கையாக எழுப்பப்பட்ட அநீத கட்டமைப்புகள் இவையும் பெரிய அல்லது சிறிய மட்டங்களில் சமாதானம் நிலைகொள்வதற்கு அச்சுறுத்தலாயுள்ளன. அந்த வகையில் தனிநபர்களாகிய நாம் ஒவ்வொருவருமே சமாதான குழப்பிகளாக செயற்படுவதுண்டு.

அனைத்துலக சமாதான தினமாகிய இன்று சொற்பநேரம் எமது மனங்களை ஒரு நிலைப்படுத்தி ,சமாதானத்துக்கு எமது பங்களிப்பு என்ன என்பது பற்றிச் சிந்தித்து, இறைப் பிரார்த்தனையில் ஈடுபடுவது பயனுள்ளதாயிருக்கும்.

# சமாதான வாழ்த்துச் செய்திகள்

**“வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி”**

**சர்வதேச சமாதான தினமாகிய இன்று சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம், சமாதானச் செய்திகளை ஐக்கிய நாடுகள் ஸ்தாபன செயலாளரிடமிருந்தும், மதத்தலைவர்களிடமிருந்தும் அரச, அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளிடமிருந்தும் வழங்கி இந்நாளை சமாதான நாளாக அனுஷ்டிக்குமாறு அனைவரையும் அழைக்கின்றது.**



Dear Friends around the world,

Peace is the paramount United Nations mission. It is the basis of our existence. The essence of our identity. The cause that animates everything we do.


September 21, the International Day of Peace, is a day on which we reaffirm our commitment to this quest.

It is an opportunity to consider how to strengthen our system of collective security. And it is meant to be a day of global cease-fire. I call on all countries and all people to stop all hostilities for the entire day. I also urge all people around the world to observe a minute of silence at 12 noon.

Twenty-four hours is not a long time. But it is time enough for combatants and political leaders to consider the destruction they are visiting on their people, and on their lands.

It is long enough to look over the barricades, and through the barbed wire, and to see if there is another path. On this International Day of Peace, let us all honour those who have suffered from violence. Let us hold in our hearts the ideal of peace.

Kofi Annan
UN Secretary-General



**“வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி”** என்ற தெளிந்ததொரு கருத்தொனியில் சமாதான வாரமொன்றைப் பிரகடனப்படுத்தி, யாழ்.குடாநாட்டில் சமாதான விழிப் புணர்வுகளையும், செயற்பாடுகளையும் செய்துவரும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனத்திற்கு எனது பாராட்டும், ஆசீரும் உரித்தாகுக!

‘சமாதானம்’ என்பது அரசியலுடன் கலக்கப்பட்ட வியாபாரச் சொல்லாக எம் அனைவராலும் ஜீரணிக்கப்படுகின்றது. தவிர, இலங்கை அரசியலிலும், உலக அரங்கிலும் பதவிக்கு ஏணியாக, பணத்திற்கான ஓர் சந்தையாக சமாதானம் என்ற சொல்லைப் பயன்படுத்துவது வருந்தத்தக்கது. சமாதானம் அரசியல் விடுதலையை மட்டும் குறித்து நிற்கும் ஓர் பதம் அல்ல. மாறாக தேசிய, இன, மத, மொழி, பண்பாட்டின் எல்லைகளைக் கடந்து, ஆன்மீக விடுதலையை குறித்து நிற்கும் ஓர் பதமாகும்.

மக்கள் இன்மொழி பேசி, இரக்கம் காட்டி, உயிர்களுக்கு மதிப்பளித்து, ஒன்றுபட்டு, வேற்றுமையில் ஒற்றுமையாய் வாழ்வது சமாதானத்தின் சிறப்பாகும். பண்பாட்டின் வேற்றுமைகளைக் கொண்டாடுவதை விடுத்து, அவற்றை முரண்பாட்டின் காரணங்களாக பாவித்தல் கூடாது. இன, மத, மொழி, தேசிய ஆர்வங்களால் பல உயிர்களைப் பறிகொடுத்து துன்பியல் வாழ்வை அனுபவிக்கும் நாம், சமாதனத்திற்காக ஒன்றுபடுவோம். குறிப்பாக வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி நகர்ந்து, சமாதானப் பண்பாடொன்றை எம் மத்தியில் உருவாக்குவோம். சமாதானப் பண்பாடென்பது நல்விழுமியங்களின், மனநிலைகளின், நடத்தை முறைகளின், வாழ்க்கை வழிகளின் தொகுப்பாகும். மட்டுமன்று, இப்பண்பாட்டு வன்முறையை விடுத்து முரண்பாட்டைத் தடுத்து, தனித்துவங்களை மதிக்கும் ஓர் பண்பாகும்.

இந்நாளில் சமாதானத்திற்காக ஒன்றிணைந்து உழைக்க அனைவரையும் அழைத்து, வாழ்த்தி ஆசிக்கின்றேன்.

மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
யாழ் மறைமாவட்ட ஆயர்.



### அருள் ஆசிச் செய்தி

**அன்புள்ளவர்கட்கு -**


இன்று உலக சமாதானதினமாகும். உலகில் வாழும் அனைத்து மனித உயிர்களிற்கும் மிகவும் அவசியம் தேவையானது சமாதானம் ஆகும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம் இலங்கையில் வாழும் தமிழின மக்கள் துன்பத்திலிருந்து விடுபட்டு சமாதானத்துடன் வாழ்வதற்கு இந்நாளை சிறப்பிப்பது, ஏக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிற்கு இந்நிகழ்ச்சி மனஆறுதலை தருவதாகும். சமாதானம் நிலைத்துவர அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக. சமாதானம்! சமாதானம்! சமாதானம்! இதுவே இன்றைய கருப்பொருளாகவுள்ளது.

‘என்றும் வேண்டும் இன்ப அன்பு’

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
**இரண்டாவது குருமகா சந்நிதானம்**

“Every day many children, women and men around the world are dying because of wars. Lives of the people are precious and everyone should respect that by not taking it away from the people of this world. I pray that peace will conquer the world and the chance to live in peace and harmony will be given to each and everyperson”.

Best regards
Agron Dragaj, UNHCR, Jaffna



### சமாதானச் செய்தி



நாடு மறுபடியும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்குவதால் வழமை போல் தேர்தல் இனக்கூச்சலை உண்டாக்கும். சிறு பான்மையினரை பகைவர்களாக இனங்காணும்படி இந்நாட்டு மக்கள் பெரிதான மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளனர். அதனால் ஒரு தேர்தலிலிருந்து மறு தேர்தலிற்கு மோசமான முறையில் பாதிப்படைந்துள்ளோம். நாம் ஒரே நாட்டில் வாழவேண்டுமெனில் வேறு வழியின்றி எமது வேறுபாடுகளை ஏற்றுக்கொண்டு ஒன்றாக வாழ்வதைவிட வேறு மார்க்கமில்லை. அது தான் சமாதானத்திற்கான பாதை. சந்தாப்பத்திற்குகந்த முறையில் செயற்பட்டு கூடி வாழ்வதை ஆதரிப்போம். அந்த முறையில் சமாதானத் திற்காகப் பாடுபடுவோம். சமாதானம் என்பது அமைப்பு ரீதியான சமயங்களுக்கு அப்பாற்பட்ட புனிதமான சொல். ஆனால் சகல பெரிய மதங்களும் சமாதானம் பற்றியே பேசுகின்றன. காருண்யமுள்ளவரான புத்த பெருமான் சமாதானம் பற்றியே பேசினார். காருண்யமுள்ளவரான யேசுவும் சமாதானம் பற்றியே பேசினார். இந்துக்களும் ஆன்மிக ரீதியில் அப்படியே பேசுகின்றனர். வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று சமாதானத்திற்காகச் செயற்பட எம்மால் முடியாதா? எமது பாடசாலை பாடவிதானங்களில் சமாதானக்கல்வி ஒன்றிணைக்கப்படவேண்டும். இதைச் செய்வதற்கு நாம் தாமதித்து விட்டோம். ஆனால் மிகவும் தாமதமாகிவிட்டதாக நான் நினைக்கவில்லை. சமாதானமான தேர்தலுக்காக எதிர்பார்ப்புடன் செபிப்போம். நேர்மையான தேர்தல் நடைபெற்றால் மக்களின் தீர்ப்பினை ஏற்று தேர்தலுக்குப் பின்னரான சமாதான சூழலுக்காகவும் செபிப்போம்.

**அருட்தந்தை S. M.செல்வரட்ணம் அமதி,**
**முதல்வர் - யாழ் மாகாண அமல மரித்தியாகிகள்**

### சமாதானச் செய்தி

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது பொது ஒன்று கூடலின் தொடக்க நாளில் புரட்டாதி மாதம் 21ம் திகதியை சர்வதேச சமாதான தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளமையை அறிந்து நான் சந்தோ'மடைகிறேன். இதை முன்னிட்டு சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம் புரட்டாதி மாதம் 15ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரையிலான நாட்களை சமாதான வாரமாக அனு'டிப்பதை அறிந்தமை எனக்கு இரட்டிப்பு மகிழ்சியை தருகின்றது. இச் சந்தர்ப்பத்தில் இந்த சமாதானச் செய்தியை தெரிவிப்பதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.



சமாதானம் என்ற விடயம் ஒவ்வொரு மனிதனுக்கும்இ அவனுடைய இயல்பும்இ ஊக்கமும்இ மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்விற்கு மிகவும் இன்றியமையாத அம்சமாகவுள்ளது.

ஆனால் அதே நேரத்தில கடினமான பேச்சுவார்த்தைஇ உழைப்பு மூலமே சமாதானத்தை அடையலாம் என்பதையே நாம் அனுபவம் மூலமாகக் கற்றுக் கொண்டோம். இதனை அடைவதற்கு அனைவரினதும் பங்களிப்பு வேண்டும். போர் மற்றும் அசாதாரண நிலைமைகளால் இந்த உலகத்தில் பெருந்தொகையான உயிரழிவுகள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன.

ஏன் நாங்கள் இந்த அழகான பூமியில் சமாதானமாக வாழ்ந்து பெறுமதி வாய்ந்த உயிர்கள் அழிவதைத் தடுக்க முடியாது? சர்வதேச சமாதான தினத்தின் பிரகடனமானது இந்த உலகத்தின் சனத்தொகையில் ஒரு பகுதியினரின் இத யங்களுக்காவது சமாதானத்தின் தேவையை உணர்த்தும் என நான் நம்புகின்றேன்.

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம் சமாதானத்தை நோக்கி முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளும் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் S. மோகனதாஸ்**
**துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்**

# மாபெரும் சமாதானக் கலை விழா

**“வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி”**

இடம்:- யாழ் திருமறைக் கலாமன்றம், காலம்:- 21.09.2005, நேரம்:- மாலை 6.30

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் புரட்டாதி மாதம் 21ம் திகதியை சர்வதேச சமாதானதினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இத்தினத்தை முதன்மைப்படுத்தி யாழ்ப்பாணத்தில் சமாதான நிறுவனமாக இயங்கிவரும் “சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம்” இன்று மாபெரும் சமாதானக் கலை நிகழ்வு ஒன்றை திருமறைக் கலாமன்றத்தில் ஒழுங்கு செய்துள்ளது. பாடசாலைச் சிறார்களின் சமாதான நிகழ்வுகளும், “கலாபவனம்” தலைமையில் நடனங்களும், சிறப்பு நிகழ்வாகத் திருமறைக் கலாமன்றத்தின் “கொல்ஈனும் கொற்றம்” எனும் நாட்டுக்கூத்தும் நடைபெறவுள்ளது. அனைவரையும் வருக வருகவென வரவேற்கின்றோம்.

## போட்டியில் வெற்றியீட்டி பரிசு பெறுபவர்களின் விபரம்

**சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனத்தால் சமாதான வாரத்தையொட்டி நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சுவரொட்டி போட்டி முடிவுகள் பின்வருமாறு**

**கவிதைப் போட்டி முடிவுகள :-** செல்வி.சோபிகா ஸ்ரீஜீவா (முதலாம் இடம்) செல்வி சு.சுகந்தினி (இரண்டாம் இடம்) செல்வன் ஆ.ஜென்சன் றொனால்ட் (கவிஞர் சூரியநிலா) (மூன்றாம் இடம்)

**சித்திரப் போட்டி முடிவுகள் :-** செல்வி.கார்த்திகேயினி திருநாவுக்கரசு (முதலாம் இடம்) திருமதி.மாலாதேவி மதிவதனன் (இரண்டாம் இடம்) செல்வன் ப.கோகிலன் (மூன்றாம் இடம்)

**கட்டுரைப் போட்டி முடிவுகள் :-**

**முதலாம் பிரிவு:** செல்வி.மைதிலி மோகனராசன் (முதலாம் இடம்) செல்வன்அருள்ராஜா அங்கலின்றாஜ் (இரண்டாம் இடம்) செல்வன் தி.ருநாவுக்கரசு துவாரகன் (மூன்றாம் இடம்)

**இரண்டாம் பிரிவு:** செல்வி தனந்திகா சிற்றம்பலம் (முதலாம் இடம்) செல்வன் தர்மகுலசிங்கம் சுஜீவன் (இரண்டாம் இடம்) செல்வி முகூர்த்தனா பாலச்சந்திரன் (மூன்றாம் இடம்)

**மூன்றாம் பிரிவு:** செல்வி யோசப்பின் ஷியார்னி லூக்காஸ் (முதலாம் இடம்) செல்வன் அன்ரனி எட்வின் றோஜர் (இரண்டாம் இடம்) செல்வி ஷிறோமி அந்தோனிராஜா (மூன்றாம் இடம்)

**வெற்றி பெற்றவர்களிற்கான பரிசுகள் இன்று மாலை 6.30 மணிக்கு திருமறைக்கலாமன்றத்தில் நடைபெறவுள்ள சமாதான நிகழ்வில் வைத்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். மேலும் இப்போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றிய அனைத்துப்போட்டியாளர்களையும் பாராட்டுவதோடு மேற்படி சமாதானக் கலை நிகழ்வில் பங்குபற்றும்படி உங்களை அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.**

**சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம், இல. 08 குருசோ வீதி, யாழ்ப்பாணம்.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதான நாளை முன்னிட்டு பேரணியும் ஒன்றுகூடலும்!

## கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது

கொழும்பு —

அனைத்துலக சமாதான நாளை முன்னிட்டு இலங்கை தேசிய சமாதானப் பேரவை சமாதானப் பேரணியையும், ஒன்றுகூடலையும் இன்று கொழும்பில் நடத்தவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தலை நடத்துதல், போர் நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடித்தல், யார் வெற்றி பெற்றாலும் ஓர் அடிப்படை இணக்கப்பாட்டை அடிப்படையாக வைத்துச் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லல் போன்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இன்று நண்பகல் 12 மணிக்கு விகாரமாதேவி பூங்காவிலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி, 1.45 மணியளவில் புதிய நகர மண்டபத்தை வந்தடைந்ததும், கூட்டம் இடம்பெறவுள்ளது. இந்தப் பேரணியில் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றபோது இதில் கலந்துகொண்ட ஜாதிக ஹெல உறுமய பிக்குகளையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் படத்தில் காணலாம்.

# 300 அடி கோபுரத்தில் ஏறி பத்துபேர் உண்ணாவிரதம்!

கொழும்பு —

புத்தளம் பாலாவியில் உள்ள 300 அடி தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்றில் ஏறி பத்துப்பேர் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

காணி சீர்திருத்த ஆணைக் குழுவுக்கு சொந்தமான 6 ஏக்கர் காணி பெரும்பான்மை சமுகத்திற்கு வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்து இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம்கள் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காணி தனியார் தொலைபேசி கோபுரம் ஒன்றை அமைக்க வழங்கப்பட்டமையை ஆட்சேபித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

# காவலிலுள்ள...

கே.ஏ.டி.சரத் (வயது 39), கேமந்த (வயது 30) ஆகிய மூவரையும் நேற்றுக்காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை அவர்களது பெற்றோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மன்னாரில் அனுமதியின்றி உள்நுழைந்ததையடுத்து மூன்று பொலிஸாரும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மூவரையும் கடந்த வாரம் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நேரில் சந்தித்தனர். இதையடுத்து மூவரது பெற்றோரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் சந்திக்க அனுமதி கோரியிருந்தனர்.

இதை ஏற்றுக்கொண்ட விடுதலைப் புலிகள் மூவரது பெற்றோரையும் சந்திக்க அனுமதித்தனர்.

# இறுதிப்போரை...

தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் பிரபாகரன், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

தமிழீழபோருக்கான தீர்மானத்தை கூட்டுறவுச்சங்கத் தலைவர் கேதீஸ்வரன் வாசிக்க தமிழ்த்தேசிய எழுச்சி பிரகடனத்தை வேளமாலிகிதன் பிரகடனத்தை வாசித்தார்.

இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியதுடன், தமிழீழ மண்மீட்புக்கான போராட்டத்தை நடத்துவதே ஒரே வழி எனத் தெரிவித்து அதற்கான ஆணையை வழங்கினர்.

இதேவேளை, இறுதிப்போருக்கு போராளிகளுடன் நின்று உதவிகளை வழங்குவதற்கான தற்காப்பு பயிற்சிகளை உடன் வழங்குமாறு கோரிக்கை விடுத்ததையடுத்து எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி மைதானத்தில் தற்காப்பு பயிற்சியில் ஈடுபடுவது என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# வலிமைமிக்க...

என்று தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்புகிறார்கள். இதன்மூலம் தற்போது நடைமுறையிலுள்ள அங்கீகரிக்கப் படாத கடற்படையாக இருக்கும் விடுதலைப் புலிகள் கடற்படைப் பிரிவை இந்தப் பிராந்தியத்தின் மூன்றாவது கடற்படையாக நிலைநிறுத்த விடுதலைப் புலிகள் முயற்சிக்கிறார்கள்.

உலகிலேயே கடற்படை வைத்திருக்கும் ஆயுதக் குழு விடுதலைப் புலிகள் மட்டும்தான்.

இந்தியப் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் கடற்படை மூலம் கடல்சார் பயங்கரவாதச் செயல்களை இந்தியா எதிர்நோக்கும் அபாயத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் இருந்து நவீன கடற்படைச் சாதனங்களை விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்துள்ளார்கள்.

சமீபத்திய இந்தியக் கடற்பிராந்தியம் தொடர்பான அறிக்கையில் - கடற்பிரதேசத்தைக் கட்டுப்படுத்துவது மட்டும் முக்கியமல்ல, எதிரிகள் இந்தப் பிரதேசத்தைப் பயன்படுத்த அனுமதிக்காமல் இருப்பதும் அவசியமானது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற இந்தியக் கடற்படைத் தளபதி சென்னையில் வெளியிட்ட ஆய்வறிக்கையொன்றில் -

இந்திய - இலங்கை பாதுகாப்புக்கு கடற்புலிகள் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரைவான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ளாவிட்டால் விடுதலைப் புலிகள் தங்களது ஆளுகைப் பகுதியை அதிகரித்து விடுவார்கள். இது தெற்காசிய பிராந்தியப் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமையும்.

இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினையில் விரைந்து செயற்படும் இரு தரப்பினரும் இந்தப் பிரச்சினைக்கான காரணியை அகற்ற வேண்டும்.

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்குப் பகுதி கடல் பிராந்தியத்தைத் தமிழீழத்தின் கடற்பிரதேசமாக ஏற்கனவே விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளார்கள். அவர்கள் அருகிலுள்ள கடற்பிரதேசங்களையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துவிடக் கூடும்.

2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்னர் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் நீண்ட காலத்துக்குப் பிறகு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவே இரு தரப்பு மீனவர்களின் பிரச்சினைக்குக் காரணமாக இருக்கிறது என சூரியநாராயணன் தனது புத்தகத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழீழ விடுதலைப் போருக்கான...

இன்று இல்லையென்பது வெளிப்படையானது.

தமிழ்பேசும் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளையும், தமிழீழ தேசிய தலைமைக்கான ஆதரவையும் வரலாற்றில் எப்போதும் இல்லாதவாறு பெரும் எடுப்பில் வெளிப்படுத்தி வருகின்றனர். ஜுலை 27 ஆம் திகதி 2005 வவுனியா மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை உள்ளடக்கிய பிரகடனம் வெளிப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் மக்கள் எழுச்சி பிரகடனங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. செப்ரெம்பர் 1 இல் கிளிநொச்சியில் லட்சக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி தமது அரசியல் நிலைப்பாட்டை பிரகடனம் செய்தனர் என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

இலங்கை அரசுக்குள் பலத்த அதிகாரப்போட்டி நிலவுகின்றது. உட்கட்சி பூசல்களாலும், பொருளாதார நலிவினாலும், இனவாத - மதவாத கடும் கோட்டுபாடுகளாலும் அரச இயந்திரம் பலவீனப்பட்டு சிதைந்துள்ளது. வழமைபோல் அதிகார தக்கவைப்பிற்காக தமிழ் பேசும் மக்கள் மீது போர் வலிந்து திணிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது.

இதனால் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் சமாதான செயல்முறை தொடர்பாக விரக்தியும், ஏமாற்றமும் ஏற்பட்டுள்ளது. தங்களது அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக அவர்கள் சிந்திக்க தலைப்பட்டுள்ளனர். தமிழ் பேசும் மக்களுடைய வளமும், பலமும், இலட்சியப்பற்றும் எவ்வாறானதென்பதை சமகால போர் ஓய்வுக்கு முன்னைய காலங்களில் வெளிப்படுத்தியிருக்கிறோம்.

தற்போதைய அரசியல் கள யதார்த்தத்தின் அடிப்படையில் போர் முனைப்பும், சமாதான நடவடிக்கைகளை முடக்கவும் இலங்கை அரசும், அதன் இன மத கடும் கோட்பாட்டாளர்களும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சர்வதேச அனுசரணையை புறந்தள்ளவும், அதிகாரப் பகிர்வு யோசனையைக் கைவிடவும் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை முன்னிறுத்தி பௌத்த - சிங்கள தேசத்துக்கு முதன்மை நல்கவும் பல இனவாத உள்ளக உடன்பாடுகளும், கூட்டுக்களும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அரசியல் களத்தில் அகப்புற நிலைப்பாடுகளிடையே தமிழ்பேசும் மக்களாகிய நாம் தீர்க்கமான நிலைப்பாட்டுக்கு வரவேண்டிய சூழ்நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இலங்கை அரசின் அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகளை அதற்கேயுரிய வழிகளிலும் சந்திப்பதற்கு நாம் தயாராகியுள்ளோம்.

யுத்த முனைப்புக்களுக்கு முகங்கொடுத்து யுத்தத்தை யுத்தத்தின் வழியிலேயே சந்தித்து எமது அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கத் தீர்மானித்துள்ளோம். தமிழ் பேசும் மக்களின் இந்த அரசியல் நிலைப்பாட்டுக்கும், தேசிய இன விடுதலைப் போராட்டத்துக்கும் சர்வதேச சமூகம் உலக அரசின் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக எமது விடுதலைப் போரை அங்கீகரித்து ஆதரவளிக்குமாறு வேண்டுகிறோம்.

தமிழ்பேசும் மக்களாகிய நாம் அனைவரும் மீண்டும் ஓர் மிடுக்குப் பெற்று எம்மீது வலிந்து திணிக்கப்படும் போரை எதிர்கொள்வதற்குத் தயாராகுவோம். அனைவரும் முழுமையான ஆயுதப் பயிற்சியைப் பெறுவோம். எமது அனைத்து வளங்களையும், பலங்களையும் விடுதலைப் போர் முனைக்கு வழங்குவோம். போர் வலியதெனினும் எமது தாயக விடுதலைக்கு அதுவே தவிர்க்கமுடியாத வழியாகும் என்பதால், இன்றிலிருந்து எம்மையும், எம்மைச் சூழவுள்ள யாவற்றையும் தமிழீழ தாயக விடுதலைக்கு அர்ப்பணிப்போம் என உறுதியெடுத்துக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு பல்கலை...

கொழும்பு பஸ் சேவை ஆர்ப்பாட்டம் முடியும்வரை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

ஏறாவூர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கிரிகலவுடன் வந்த பெருமளவிலான பொலிஸாரும் படையினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்களைக் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டு கலைக்க முற்பட்ட போதும் அதற்கு மாணவர்கள் இடம்கொடாமல் உபவேந்தர் ரவீந்திரநாத் வரும்வரை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

உபவேந்தர் வந்ததும் எதிர்ப்புப் போராட்டம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்துடன் முடிவுற்றது.

இனந்தெரியாதோரால் கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி ரூபி வலண்டினாவின் வீட்டின்மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் அவரது மகன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# துணைப்படைகளின் செயற்பாடு...

இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரீனா றொக்கா, தெற்காசிய பணிப்பாளரும், ஆப்கானுக்கான பிரிட்டன் வெளியுறவு அமைச்சக அதிகாரியுமான ரொம்பிலிப்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

போர் நிறுத்தத்தை அமுல்படுத்துவதற்கு விடுதலைப்புலிகளும், இலங்கை அரசாங்கமும் மீளவும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும். அத்துடன், கடந்த மாதம் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். எனினும், இந்தக் கொலையை விடுதலைப்புலிகள்தான் செய்தனர் என கூற முடியாதுள்ளது.

சமாதான முயற்சி தொடர்பாக விடுதலைப் புலிகள் வெளிப்படையான திட்டங்களை மேற்கொள்வதுடன், சமாதான முயற்சி தொடர்பான தமது விருப்பார்வத்துடன் கூடிய மாற்றத்தை வெளிப்படுத்த வேண்டும்.

கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நோர்வேயின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் துணைப்படைகளின் செயற்பாடுகளால் அங்கு அமைதியற்ற நிலை தோன்றியுள்ளது. எனவே, இலங்கை அரசாங்கம் துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைதல் வேண்டும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்காக, இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்த, நோர்வே தெரிவித்த இடத்தை விடுதலைப்புலிகள் நிராகரித்திருப்பது கவலை தருகிறது. அத்துடன், போர் நிறுத்த உடன்படிக்கையை முறையாக அமுல்படுத்துவது தொடர்பான நடைமுறைச் சாத்தியப்பாடு குறித்து ஆராய்வதற்காக அடுத்தமாதம் நோர்வேயின் விசேடபிரதிநிதியாக வரும், மேஜர் ஜெனரல் டொன்புறூவ் ஹொவ்டேயிற்கு இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இலங்கையின் எதிர்காலம் இலங்கை மக்களின் கையிலேயே உள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் இலங்கையின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் களமாகும். இந்தத் தேர்தலுக்குப் பின்னர் இலங்கையிலுள்ள அனைத்துக் கட்சிகளும், வன்முறைகளிலிருந்து விடுபட்டு சமாதான தீர்வை அடையக் கூடிய வகையில் செயற்பட வேண்டுமென நாம் விரும்புகின்றோம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படுமென நாம் நாம்புகின்றோம். இந்த முரண்பாடுகளுக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே அரசியல் தீர்வொன்றை அடையலாம், ஐக்கிய இலங்கைக்குள், சமஷ்டி தீர்வே இதற்கான வழியாகும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்கட்டுமானத்திற்கு சர்வதேச சமூகம் வழங்கிய உறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அத்துடன், வடக்கு - கிழக்குப் பகுதி மீள்கட்டுமானத்திற்கு இலங்கை அரசாங்கம், விடுதலைப்புலிகள் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் மிகவும் முக்கியமானவர்கள்.

இறுதியாக இலங்கையின் சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணி வகித்த நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல் கிசனுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், தொடரும் நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு எமது உறுதியான ஆதரவு உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422
அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
03.10.2005க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.
80% OFF

| | | |
|---|---|---|
| Batch II | - | 23/09/2005 |
| Batch III | - | 24/09/2005 |
| Batch IV | - | 25/09/2005 |
| Batch V | - | 02/10/2005 |


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.